பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 01 சனிக்கிழமை 15.05.2021 கதிர் 191

## இது ரகசியம் அல்ல!

ஆளுங்கட்சிக்குள் இருக்கும் குத்துவெட்டு, குளறுபடிகள் நேற்று முன்தினம் நாடாளுமன்ற அலுவல்கள் குழுக் கூட்டத்தில் வெளிப்பட்டன என்று தெரியவருகின்றது.

செவ்வாயன்று நாடாளுமன்றம் கூடுகின்றது. அந்த வாரத்தில் நாடாளுமன்ற பக்கம்02 »

## 2,289 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 289 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த ☞2

# ஒரே நாளில் மட்டும் 31 பேரை பலியெடுத்தது கொரோனா!

## 923 ஆக அதிகரித்தது மொத்தச் சாவு

இலங்கையில் நேற்று மாத்திரம் 31 கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவே நாட்டில் நாளொன்றில்பதிவானஅதிகூட்சகொரோனா மரண எண்ணிக்கையாகும்.

இதற்கமையநாட்டில்கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை எண்ணிக்கை 923 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.


## யாழில் மேலும் 48 பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 48 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 60 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ☞2

# அரசின் படுகேவலமான செயலே முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பு

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கொதிப்பு



இறுதிப் போரில் சாகடிக்கப்பட்ட எமது உறவுகளை நினைவுகூர்ந்தே முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியை அமைத்திருந்தோம். அதை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பாதுகாப்புடன் அரசு அடித்துடைத்துள்ளது. இது அரசின் படுகேவலமான செயலாகும். இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். ☞2

## பயணத் தடையால் நாடு முழு முடக்கம்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு நேற்றுமுன்தினம் இரவு 11 மணி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பயணக்கட்டுப்பாடு நாளைமறுதினம் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை அமுலில் ☞2




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தக் கூட்டம் நாடாளுமன்றக் கட்டத்தில் சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

*"பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடன் இரண்டு தடவைகள் விரிவாகப் பேசினனேன். இப்போது இந்தக் கூட்டத்துக்கு வர முன்னரும் – ஒரு மணி நேரத்துக்கு முன்னரும் – பேசினேன். கொரோனாத் தொற்றுப் பரவல் உள்ள இந்தச் சமயத்தில் மக்களை ஒன்று கூட வேண்டாம் என்று ஊரடங்கு போட்டு மறித்து விட்டு, நாம் இப்படி நாடாளுமன்றக் கூட்டத்தை நடத்துவது தப்பு. செவ்வாயன்று கூடி, உடனேயே சபை அமர்வைத் தள்ளிப் போடுவோம். அந்தக் கருத்தைத்தான் தானும் கொண்டிருக்கின்றார் என்று பிரதமரும் என்னிடம் கூறினார். அதனையே அவர் வலியுறுத்தினார். அதனால் கூட்டத்தை செவ்வாயன்று கூடுவதுடன் ஒத்திப்போடுவோம்."* – என்றார் சஜித் பிரேமதாஸா.

ஆனால் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எவரும் அக்கருத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

கொழும்புத் துறைமுக நகர ஆணைக் குழு சட்ட மூலம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பை செவ்வாயன்று அறிவிப்பது, புதனும், வியாழனும் அதன் மீதான விவாதத்தை நடத்தி விடயத்தை ஒப்பேற்றுவது என்று அரசுத் தரப்பு மிக உறுதியாக இருந்தது.

சபை அமர்வை நடத்தாமல் ஒத்தி வைக்க வேண்டும் என்பதுதான் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் விருப்பமும், எதிர்பார்ப்பும். அதை என்னிடமே அவர் கூறியுள்ளார் என்று சஜித் பிரேமதாஸா மீண்டும் மீண்டும் கூறியமையை ஆளும் தரப்பில் யாருமே கணக்கெடுக்கவில்லை; கண்டுகொள்ளவில்லை.

*"நான் இப்போதுதான் பிரதமருடன் தொலைபேசியில் பேசிவிட்டு வருகிறேன். உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் பிரதமருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசிப் பாருங்கள்"* – என்றும் சஜித் கேட்டுப் பார்த்தார்.

அரசுத் தரப்பில் யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அரசுத் தரப்பினர் பிரதமரின் கருத்தை உதாசீனப்படுத்தி – புறக்கணித்து – நடக்கும் விதத்திலான உத்தரவுகளோடு அல்லது வழி காட்டுதல்களோடு அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தனர் என்பது அப்பட்டாகத் தெரிந்தது என்றார் அக்கூட்டத்தில் பங்கு பற்றிய இன்னொரு பிரமுகர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவைப் பொறுத்தவரை விவகாரம் இப்போது அவரது கையை மீறிச் சென்று எத்தனையோ நாள்களாகி விட்டன.

கட்சிக்குள்ளும், அரசுக்குள்ளும் தம்மை மீறி நடக்கும் விடயங்களைப் பார்த்திருப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை என்றே தோன்றுகின்றது.

★ ★ ★

நாடாளுமன்றம் வரும் செவ்வாயன்று கூடும் போது தற்சமயம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ரிஷாத் பதியுதீன் எம்.பி. நாடாளுமன்றுக்கு அழைத்து வரப்படுவார். அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனா தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் விவகாரக் குழுக் கூட்டத்தில் இந்த வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார் சபாநாயகர்.

*"தப்பித் தவறி அவர் நாடாளுமன்றுக்குக் அழைத்து வரப்படாத நிலைமை ஏற்பட்டால், அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறிய குற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?"* – என்று ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸநாயக்கா நேரடியாகவே சபாநாயகரிடம் கேட்டார். 'ஆம்' என்ற பதிலளித்தார் சபாநாயகர்.

பார்ப்போம் சபாநாயகரின் நேர்மைத் திறத்தை...!

– மின்னல் –

## பட்டம் விட்ட மூவர் சாவு

காலி – மக்குலுவ பிரதேசத்தில் பட்டம் விடும் போது ஏற்பட்ட விபத்தில் 5 வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

கட்டுமான பணியில் இருந்த வீட்டின் கூரையின் மீது ஏறி பட்டம் விட்டுக் கொண்டிருந்த போது கூரை உடைந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

உயிரிழந்த ஏனைய இருவரும் 40 மற்றும் 43 வயதுடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 2, 289 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 85 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 108 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் எனவும், 27 ஆயிரத்து 54 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடம் என்பவற்றில் 585 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 48 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 பேரும், வவுனியா மாவட்டத்தில் 9 பேரும் என 60 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தொற்றாளர்களுடன் முதல்நிலைத் தொடர்பாளர்களாக சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

வவுனியா மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் 2 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 40 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும் என 48 பேருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 2 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 4 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி நொதேர்ன் சென்றல் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தொற்றாளர்களுடன் முதல்நிலை தொடர்பை வைத்திருந்த நிலையில் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் – என்றார்.

# இணைய வெளியில் தமிழமுதம்

தென்மராட்சி இலக்கிய அணி இணைய வெளியில் நடத்தும் தமிழமுதம் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை நடைபெறுகின்றது. அதில் 'சிலம்பில் குறள் மாந்தர்' என்ற பொருளில் கருத்தரங்கு இடம்பெற உள்ளது.

தென்மராட்சி இலக்கிய அணி ஆண்டுதோறும் கம்பன் விழா,வள்ளுவர் விழா, பாரதி விழா என முப்பெரும் விழாக்களை நடத்திவருவதோடு மாதாந்த நிகழ்வாக தமிழமுதம் நிகழ்வுகளையும் நடத்தி வந்தது. கடந்த ஆண்டு முழுவதும் கொரோனா நோய்த்தொற்றால் உண்டான அசாதாரண சூழலைக்கருதி இந் நிகழ்வுகள் இடம்பெறவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் இணைய வெளியில் தமிழமுதம் நிகழ்வு இன்று சனி மாலை 4.00 மணிக்கு இடம் பெறும். சிலம்பில் குறள் மாந்தர் என்ற பொருளில் நடைபெறும் கருத்தரங்கின் தலைவராக பேராசிரியர் அ.சண்முகதாஸும், பேச்சாளர்களாக ஆசிரியர் ச. மார்க்கண்டு, 'வலம்புரி' பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இந்த நிகழ்வின் தலைமையுரையினை பேராசிரியர் க.கந்தசாமி நிகழ்த்தவுள்ளார். மங்கல விளக்கினை ஓய்வுநிலை அதிபர் திரு இ. ரவீந்திரன் தம்பதியர் ஏற்றுவர். கடவுள் வாழ்த்தை விரிவுரையாளர் வே.ஞானசம்பந்தன் பாடுவார்.

# வடமராட்சி கடலில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 11 மீனவர்கள் கைது





(ந.லோகதயாளன்)

யாழ்.,வடமராட்சி கடற்பரப்புக்குள் சட்டத்துக்குப் புறம்பாகக் கடலட்டை பிடித்த 11 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னாரைச் சேர்ந்த 25 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்களே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கடலட்டை தொழில் இடம்பெறுவதாகக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தொழிலில் ஈடுபட்டவர்களிடம் அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை. அதனால் சட்டத்துக்குப் புறம்பாக கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் 11 மீனவர்களும் கடற்படையினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர். தொழிலுக்குப் பயன்படுத்திய 4 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதான மீனவர்கள் 11 பேரையும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பயணத் தடையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)





இருக்கும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

முழு நேரப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் 24 மாவட்டங்களின் நகரங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. வீதிகளில் முப்படையினரும், பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத் தவிர, வேறு எந்தவொரு தரப்பினரும் வெளியில் செல்லக்கூடாது எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் இந்தக் காலப் பகுதியில் மூடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

எவரேனும் ஒருவர் சுகயீனமடையும் பட்சத்தில் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி வரை வெளியில் செல்ல தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்க நடைமுறை செல்லுபடியாகாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசின் படுகேவலமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வன்னியில் இறுதிப் போரில் அரச படைகளால் கொன்றழிக்கப்பட்ட தமிழர்களை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்காலில் நினைவு முற்றம் அமைக்கப்பட்டிருந்தது. கடந்த புதன்கிழமை திடீரென இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இந்த நினைவு முற்றம் அன்று இரவோடிரவாக சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னமும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அங்கு மதகுருமார்களால் புதிதாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

இந்த அநாகரிகச் செயல்களை வன்மையாகக் கண்டித்துள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., மேலும் தெரிவித்ததாவது:–

இறுதிப் போரில் படையினரால் கொன்றழிக்கப்பட்ட எம் உறவுகளை நிம்மதியாக உறங்க விடுங்கள் என்று அரசிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் ஒவ்வொரு இனத்தவர்களும் போரில் இறந்த தமது உறவுகளை நினைவேந்த அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால், தமிழ் மக்களுக்கு இந்த அனுமதியை தற்போதைய அரசு வழங்க மறுக்கின்றது. அத்துடன், இறந்த தமிழர்களை நினைவுகூர்ந்து வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட்டிருக்கும் தூபிகளையும் இடித்தழிப்பதில் இந்த அரசு குறியாக இருக்கின்றது.

இது நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்ல செயல் அல்ல. அரசின் பயணத்துக்கு ஆரோக்கியமான செயல் அல்ல. இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு உகந்த செயல் அல்ல. இது மிக மோசமான – படுகேவலமான செயலாகும். எனவே, இந்தப் படுகேவலமான செயலை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் அதன் விபரீதங்களை அரசு விரைவில் சந்திக்க வேண்டி வரும் – என்றார்.

# முள்ளிவாய்க்கால் நினைவு தினம் திட்டமிட்டபடி மே 18 நடைபெறும்

## வேலன் சுவாமிகள் அறைகூவல்



வடக்கு – கிழக்கு கட்டமைப்பு ஏற்பாடு செய்திருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி திட்டமிட்டபடி நடைபெற இருக்கின்றது என வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடந்த ஊடக சந்திப்பு ஒன்றின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈழத்தமிழர்களுடைய வரலாற்றில் நடைபெற்றுக் கொண்டு இருக்கக்கூடிய இந்த நூற்றாண்டிலே இன அழிப்பு இனப்படுகொலை 2009 ஆம் ஆண்டு மே மாதம் உள்ளிட்ட கடைசி மாதங்களில் முள்ளிவாய்க்காலில் நடந்தேறி இருக்கின்றன.

இன அழிப்புக்கு எதிராகவும் அநீதிக்கு எதிராகவும் நீதி கேட்டு ஈழத் தமிழினம் போராடி வருகின்றது. இந்த இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும். இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் முற்படுத்தவேண்டும் என்கின்ற பிரதான வேண்டுகோளை முன் வைத்து அனைத்துத் தரப்பினரும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம் .

இந்த வேளையிலே கொடூரமான மிலேச்சத் தனமான இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட எங்களுடைய உறவுகள் அவர்களுடைய ஆத்ம சாந்திக்காகவும் அந்த உறவுகளை இழந்து தவிக்கின்ற அனைத்து எங்களது உறவுகளுக்கும் அவர்களுடைய மன ஆறுதலுக்காகவும் வருடாவருடம் இறந்தவர்களை நினைவு கூருகின்ற ஓர் அடிப்படை உரிமை மே மாதம் நினைவு கூற உரிமை இருக்கின்றது.

இந்த வருடமும் 12 ஆவது ஆண்டாக அந்த நினைவு தின நிகழ்வு இடம்பெற இருக்கின்றது கொடிய கொரோனா அச்சக் காலப்பகுதியிலேயே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலே சுகாதார நடைமுறைகளைப் பேணி முள்ளிவாய்க்கால் நினைவு தினம் இடம்பெற்றிருந்தாலும் உங்களுடைய அனைத்து உறவுகளையும் உங்கள் உங்களது வீட்டிலேயே இருந்து நீங்கள் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்குபற்ற வேண்டும்.

முடியும் என்றால் காலை நேர உணவைத் தவிர்த்து மதியத்தில் உப்பில்லா கஞ்சி எங்களுடைய இனம் இறுதி யுத்தத்தில் ஒரே ஓர் உணவாக இருந்திருக்கக்கூடிய அந்த கஞ்சி இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி எங்களுடைய வீடுகளுக்குள்ளேயே செய்து சிறுவர்கள் இளைஞர்களுக்கு பரிமாற வேண்டும்.

எங்களுடைய இனத்தினுடைய வேதனையையும் வடுக்களையும் நடந்த சம்பவங்களையும் அதற்காக நாங்கள் போராட வேண்டிய ஒரு கட்டத்தில் இருப்பதையும் இளம் தலைமுறையினருக்கு எதிர்கால தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சியை உலகமெங்கும் வாழ்கின்ற அனைத்து உறவுகளும் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று அன்பாகக் கேட்பதோடு, மாலை 6 மணிக்கு ஆலயங்கள் தேவாலயங்கள் என்று அனைத்து இடங்களிலும் மணிஓசை எழுப்பி அகவணக்கம் செலுத்துங்கள்.

உள்ளங்களது வீட்டு முற்றம், மதில்களில் பொது இடங்களில் சனசமூக நிலையங்களில் தீபங்களை ஏற்றி இழந்த உறவுகளை நினைவு கூருகின்ற அந்த நிகழ்வை அனைவரும் ஒன்றுசேர்ந்து உரிமைக்காக செய்ய வேண்டுமென்று சமயத் தலைவர்கள் ஆகிய நாங்கள் அனைத்து உறவுகளையும் அன்பாய் கேட்டுக் கொள்கின்றோம்.

இது ஆத்மார்த்தமாக நாங்கள் செய்யப்பட வேண்டிய ஒரு நிகழ்வு. அந்த விதத்தில் இது ஆத்மார்த்தமாக நாங்கள் செய்யவேண்டும். இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மே 18 ஆம் திகதி எமது இனத்துக்காக நாங்கள் அனைவரும் இதை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இறந்த பின்னரும் கூடத் தமிழர்கள் நிம்மதியாக இளைப்பாற முடியாது

## சட்டத்தரணி க.சுகாஸ் ஆதங்கம்



முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைப்பு என்பது இறந்த பின்னரும் தமிழர்கள் நிம்மதியாக இளைப்பாற முடியாது என்பதைத் தான் சுட்டிக்காட்டுகிறது என சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சேதப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குறித்த இடத்துக்கு கடந்த வியாழக்கிழமை வருகை தந்து நிலைமைகளை பார்வையிட்ட பின்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அமைதியான முறையில் நினைவிற்கொள்ள ஈழத் தமிழினம் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் வெந்த புண்ணில் வேல் பாச்சுவது போல் அரச அதிகாரத்தின் பக்கத்துணையுடன் இனப்படுகொலையின் சாட்சியாக அமைதியாக உறங்கிக்கொண்டிருப்பவர்களின் அடையாளமாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபியின் பாகங்கள் அகற்றப்பட்டு தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டு கொரோனாவைத் தடுக்கின்றோம் என்ற போர்வையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் காவல்துறையினரின் பாதுகாப்பிற்கு மத்தியில் படையினரைத் தவிர வேறு எவரும் இந்த அநாகரிகமான செயலை – மனித குலத்துக்கு ஒவ்வாத செயலை – செய்திருக்கமுடியாது.

இது சட்டத்தின் பிரகாரம் களவு, இதனை இலங்கை இராணுவத்தினர் செய்துள்ளனர் என மக்கள் தெரிவித்துள்ளார்கள். இனப்படுகொலையாளிகள் என்ற பெயரைச் சூடிநின்ற இலங்கை இராணுவம் திருடர்கள் என்கின்ற பெயரைப் புதிதாக வாங்கியுள்ளார்கள்.

இந்தச் சம்பவத்துக்கு எதிராக இலங்கை இராணுவத்தளபதி, ஜனாதிபதி, காவல்துறை மா அதிபர் ஆகியோர் பதிலளிக்கவேண்டும். இங்கு நடைபெற்றது ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் தொடர்சியாக நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் மற்றுமோர் அங்கம், பல்கலையில் தூபியை உடைத்தீர்கள் தூபி புதிதாக மலர்ந்தது வரலாறு தெரியாதவர்களுக்கும் வரலாறு பாய்ச்சப்பட்டது.

ஒருபோதும் ஈழத்தமிழர்களின் உணர்வெளிச்சியையோ விடுதலை உணர்வையோ கட்டுப்படுத்த முடியாது. மாறாக, விடுதலைத் தீயை வரலாறு தெரியாத சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிர்கால சந்ததிக்கும் கடத்துவதற்கும் இப்படியான விடயங்கள் வழிவகுக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், இவற்றுக்கு எல்லாம் முடிவு காண வேண்டுமாக இருந்தால் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# நினைவேந்தலை படுகொலை செய்திருக்கிறது இலங்கை அரச ஆசி பெற்ற அரச இயந்திரம்

## சிவசக்தி ஆனந்தன் சீற்றம்



முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியை உடைத்தும் அதன் நினைவுக் கல்லை அகற்றிய செயற்பாடு இன்னொரு இனப்படுகொலையை செய்வதற்கு சமமானது என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடித்து அழித்த சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஐக்கிய நாடுகள் சபையின் சட்டங்களிலும் இலங்கையின் அரசியல் அமைப்பிலும் மரணித்தவர்களை நினைவு கூருகின்றமை என்பது அடிப்படை உரிமையாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கும் பொழுது அந்த அடிப்படை உரிமையைக் கூடத் தடுத்து நிறுத்தும் ஒரு நிலைமைதான் தற்போது அரங்கேறியுள்ளது.

நாட்டில் உள்ள இராணுவ நிர்வாகம் ஜனநாயகத்துக்கான அனைத்து வழிகளையும் முடக்கும் செயற்பாட்டைச் செய்து வருகின்ற நிலையில் தற்போது யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவு கூருவதற்கான வழியையும் முடக்கி ஒட்டுமொத்தமாகத் தமிழ் இனத்தின் மீதான அடக்கு முறையை அரசாங்கம் பிரயோகிக்கின்றமை அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

தமிழர்கள் தங்களுக்கான உரிமைகளுக்காகப் போராடுகின்றார்கள் என்ற புரிதலை இனியாவது சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். அடக்குமுறைகள் ஊடாகத் தமிழ் இனத்தின் அனைத்து உரிமைகளையும் பறித்து தமிழினத்தை அடிமைகளாக வைத்திருக்கும் இந்நிலைமையை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொண்டு பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு இனியாவது முன்வரவேண்டும். ஏனென்றால் சர்வதேச நாடுகள் முன்னிலையிலே எத்தனையோ வாக்குறுதிகள் தரப்பட்டதுடன் அந்தத் தரப்புக்களும் தமிழர் தரப்புக்கு எத்தனையோ அறிவுரைகளை வழங்கி விட்டுக்கொடுப்புக்களை செய்யும் படி கூறியிருந்தார்கள். அந்த அடிப்படையில் அவர்களும் இதற்குப் பொறுப்பாளிகள் தான்.

மரணித்தவர்களுக்கான நினைவேந்தலைத் தடை செய்யும் விடயம் நீதிக்காகப் போராடும் இனத்தை ஒட்டு மொத்தமாக இல்லாமல் செய்யும் செயற்பாடு என்பதுடன் இன்னோர் இன அழிப்பிற்கான முயற்சியாகவும் இது பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (100)

# முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைத்தழிப்பு தமிழர் உரிமை மறுப்பை மீள உணர்த்தியுள்ளது!

## பா.அரியநேத்திரன் சுட்டிக்காட்டு



முள்ளிவாய்க்காலில் நடப்பட்ட நினைவுச்சின்னத்தை உடைத்ததன் மூலம் இலங்கையில் தமிழ்மக்களின் உரிமை எந்தளவில் மறுக்கப்படுகிறது என்பதை சர்வதேசத்துக்கு பறைசாற்றியுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், பட்டிருப்புத் தொகுதி இலங்கை தமிழரசுக்கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னங்களை உடைத்தமை தொடர்பாக மேலும் கூறுகையில் –

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்று போர் மௌனிக்கப்பட்டு 12, ஆண்டுகள் கடக்கும் இவ்வேளையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் இருந்த 'ஏந்தியகைகள்' அடையாளமாக கடந்த பத்துவருடங்களாக அமைந்திருந்த நினைவுகல்லை சேதப்படுத்தி இலங்கை நாட்டின் இனவாதம் மீண்டும் ஒருமுறை சர்வதேசத்துக்கு உணர்த்தியுள்ளது.

உண்மையில் லட்சக்கணக்கான தமிழினப்படுகொலைகளைச் சந்தித்த முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் உயிர்நீத்த அனைத்து உறவுகளையும் நினைவு கூரும் தினமாக வருடாவருடம் மே18 ஆம் நாள் எமது உறவுகளால் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் விளக்கேற்றி மௌனப்பிரார்த்தனைசெய்து இறந்த உறவுகளின் உற்றார், சுற்றார் எல்லோரும் அங்கு சென்று நினைவுவணக்கத்தைச் செய்து வருகின்றமை வழமையாகும்.

இந்த வருடமும் அதற்கான ஒழுங்குகளைக் கத்தோலிக்க மதகுருமார் உட்பட பலரும் செய்துவந்துள்ளனர். இந் நிலையில் இரவோடு இரவாக அங்கிருந்த நினைவுச்சின்னம் உடைக்கப்பட்டு அதே இடத்தில் அந்த கை அடையாளம் சேதப்படுத்தியுள்ளமையை நோக்கும்போது இனவாத அகோர முகம் இந்தச் செயலை செய்துள்ளமை கோடிட்டு காட்டப்படுகிறது.

தற்போது கொரோனா நோய்ப்பரவலால் உண்மையில் அந்த இடத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தடவை கூடமுடியாது என்பது எல்லோரும் அறிந்த விடயமாக இருக்கும்போது, இவ்வாறான மனித நேயமற்ற செயலானது பல தமிழ் நெஞ்சங்களில் பாரிய மனத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரேநாடு ஒரேசட்டம் எனக் கூறப்பட்டாலும் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் வேறு விதமாகவே சட்டங்கள் உள்ளனவா என்ற கேள்வியும் தொடராக எழுந்துள்ளது.

எனவே இவ்வாறான கீழ்த்தரமான செயல் கண்டிக்கத்தக்கதுடன் சர்வதேசம் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும் எனவும் மேலும் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொடூரத்துக்குச் சாட்சியம்

பஞ்சசீலத்தைப் போதித்த கௌதம புத்தர் இன்று உயிரோடு இருந்திருந்தால் தமது பெயரால் பௌத்த – சிங்களப் பேரினவாதம் புரியும் கொடூரச் செயல்களைப் பார்த்து மனம் வெதும்பி நொந்திருப்பார்.

தமது பஞ்சீலத்துக்கே தவறான அர்த்தம் கற்பித்து அதனை நஞ்சசீலமாக்கியவர்கள் வாழும் தேசம் இதுவென்று அவரே மனம் புழுங்கியிருப்பார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிடுகின்றமை போல, மாண்டவர்களையும் நிந்திக்கும் மிருகத்தனத்தின் உச்சம் இந்த இலங்கைத் தீவில் தலைவிரித்தாடுகின்றது.

தங்களை பௌத்தர்கள், சிங்களவர்கள் என்று பெருமை பேசும் பௌத்த, சமூகத் தலைவர்களும், தெற்கு புத்திஜீவிகளும் தொடரும் இந்த மிருகத்தனத்தை பார்த்து வாளாவிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் தமது அந்த மௌனம் மூலம் வெளிப்படுத்தும் செய்தி – சமிக்ஞை – யாது?

இறந்தவர் யாராக இருந்தாலும் – அவர் காந்தீயாக இருந்தாலும், அவரைச் சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்ஸேயாக இருந்தாலும் – இறந்தவர்களின் பூதவுடலை மதிப்பதுதான் மனிதப் பண்பு. நாகரிகம்.

அதனை மதிக்கத் தெரியாத ஓர் அநாகரிகக் கூட்டம் இங்கு பஞ்சசீலம் குறித்துப் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.

கொல்லப்பட்டவர்களை, யுத்தத்தில் இறந்தவர்களை – அவர்கள் எதிரிகளாயினும் – மரியாதை செய்வதுதான் மனித மாண்பு. அதுவும், கல்லறைகளில் உறங்குபவர்களை கௌரவிப்பதுதான் மனிதத்துவத்தின் அடிப்படை இயல்பு.

பௌத்த, சிங்கள அரசனான துட்டகைமுனுக்கு கூட இந்த மனித நாகரிகப் பண்பியல்பு நன்கு புரிந்திருந்தது. அதனால்தான் தன்னுடன் யுத்தம் புரிந்து மாண்ட எல்லாளனுக்கு சமாதி அமைத்து, அந்த சமாதியை – கல்லறையை – அனைவரும் மதிக்க உத்தரவிட்டான் அவன் என்றும் –

ஆனால் நவீன துட்டகைமுனுக்களோ போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட மாவீரர் மயானங்களைத் தேடித் தேடி புல்டோஸர் கொண்டு அழித்துத் தமது மிருகத்தனத்தை வெளிப்படுத்தினர் என்றும் –

நேற்று முன்தினம் அதிகாலை வெளியான இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அது வெளியான அதே சமயத்தில், முள்ளிவாய்க்காலில் பௌத்த – சிங்களப் பேரினவாதத்தின் கோர முகம் மீண்டும் ஒரு வடிவத்தில் வெளிப்பட்டது.

நேற்று முன்தினம் இப்பத்தியில் நாம் குறிப்பிட்டபடி, தமிழர்களின் வரலாற்றில் பெரும் துயரத்தின் அடையாளம் ஊழிக் கூத்தாய்ப் பதிந்த இடம் முள்ளிவாய்க்கால். பல்லாயிரம் தமிழின மாண்பாளர்களின் உயிர்ஈகத்தின் அடையாளம் அங்குதான் புதையுண்டு கிடக்கின்றது. அவர்களது நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியையும் தகர்த்துத்தன் கைவரிசையைக் காட்டியிருக்கின்றுது பேரினவாதம்.

*"உயிர் துறந்துபோன ஆத்மாக்களை ஆத்மார்த்தமாக நினைவுகூர்வதற்கு அமைக்கப்பட்ட நினைவுத் தூபியையே வெறித்தனத்துடன் இடித்தழிக்கும் இராணுவம், போரின்போது தமிழ் மக்களை எப்படிக் கொன்று குவித்திருக்கும் என்பதை உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்"* – என்று யாழ்.மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டியுள்ள விடயம் முக்கிய அம்சமாகும்.

இலங்கைத் தீவில் இனப்படுகொலை மோசமாக அரங்கேறியது என்பதை உலகுக்கு எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் மௌனமான சாட்சியம் முள்ளிவாய்க்கால்தான்.

அங்குதான் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன. யுத்தக் குற்றங்கள் பெருமளவில் இழைக்கப்பட்டன. மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்கள் அரங்கேறின.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அரச படைகளின் கொலை வெறித்தாண்டவத்தில் தமிழரின் குருதியால் சிவந்த மண் அது.


முன்னாள் எம்.பி. சரவணபவன் குறிப்பிடுகின்றமை போல சிங்கள – பௌத்தத்தின் வழி வந்த மகாவம்சத்து வரலாற்றில் ஊறிய படைகளால் தமிழர்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்ட நிலம் – இறுதிப் போரின் அடையாளமாக இன்னும் இருப்பது – முள்ளிவாய்க்கால்தான்.

கல்லறைகளையே – மக்களின் உயிரிழப்புக்குச் சாட்சியான நினைவுத் தூபிகளையே – கொலை வெறியோடு வீழ்த்திச் சரிக்கும் இவர்களா மனிதாபிமானப் போரை நடத்தியிருப்பார்கள்? சாட்சியமற்ற போரின்போது இவர்கள் தாங்கள் என்ன செய்திருப்பார்கள் என்பதை – தமது குரூர முகத்தை – இப்போது நினைவுத் தூபித் தகர்த்தழிப்பு மூலம் முரசறைந்து காட்டியிருக்கின்றார்கள் – என்று அவர் கூறும் கருத்து சர்வதேசத்தினால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

மனித மாண்புகளுக்கு மாறான கொடூரங்களை நிரூபிக்கும் மற்றொரு சான்று இந்த நினைவுத்தூபி அழிப்பாகும்.

# அரசின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடே முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைப்பு!

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. காட்டம்



முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த 12 ஆம் திகதி இரவு அடித்து உடைக்கப்பட்டு, புதிதாக நடப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருந்த நடுகைக்கல் அகற்றப்பட்டமை அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனமான, நாகரிகம் அற்ற செயற்பாடாகும். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு தமிழ் மக்களின் இதயங்களை மிகவும் ரணப்படுத்தி இருந்தாலும், எமக்கு இது ஆச்சரியத்தை அளிக்கவில்லை. ஏனென்றால், கடந்த காலங்களில் இத்தகைய பல மிலேச்சத்தனமான நடவடிக்கைகளைத் தமிழ் மக்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலில் கொன்று குவித்ததுடன் மட்டும் நின்றுவிடாமல், துயிலும் இல்லங்களை உழவு இயந்திரம் கொண்டு உழுது அழித்திருந்தார்கள். அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு எத்தகைய கேவலமான செயற்பாடுகளையும் செய்யலாம் என்ற சிந்தனையில் செயற்படும் இந்த அரசாங்கம் தனது தலையில் தானே மண்ணை அள்ளி வாரிக்கொட்டிக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை உலகம் வெகு விரைவில் ஏற்றுக்கொள்ளத்தான் போகின்றது. அரசாங்கத்தின் இத்தகைய முட்டாள்தனமான செயற்பாடுகளால் இந்த உண்மையை இப்போதும் மறைக்க முடியாது.

ஆர்மேனியாவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை இத்தனை காலம் கடந்த பின்னர் அமெரிக்கா இப்போது தான் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அரச படைகள் இதனைச் செய்யவில்லை என்று அறிக்கை விட்டிருக்கின்றார்கள். அப்படியானால் குறித்த நினைவுத்தூபி முள்ளிவாய்க்காலில் தொடர்ந்து நிரந்தரமாக இருப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள் போல் தெரிகின்றது.

விரைவில் எமது மக்கள் புதிய நினைவுத் தூபியை அதே இடத்தில் ஸ்தாபிக்க அரசாங்கமும் படைகளும் இடமளிப்பார்கள் என்பதா இதன் அர்த்தம்?

அரசாங்கம் எத்தனை மிலேச்சத்தனமான செயற்பாடுகளை மேற்கொண்டாலும் மே 18 ஆம் திகதி அன்று நாம் எந்தவிதமான அச்சமும் இன்றி கொவிட் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக படுகொலை செய்யப்பட்ட எமது மக்களை உணர்வுபூர்வமாக நினைவுகூர இப்பொழுதே தயாராகுவோம். – என்றுள்ளது.

# முடங்கியது மட்டக்களப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் வியாழன் இரவு முதல் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தினதும் இயல்பு நிலை முழுமையாக முடங்கியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையுடன், அத்தியாவசியத் தேவைகள் நிமித்தம் வெளியில் செல்வோரைத் தவிர ஏனையவர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன், மக்கள் நடமாட்டமற்ற சூழலை அவதானிக்க முடிகிறது.

# மண்மேடு சரிந்து வீழ்ந்து நுவரெலியாவில் வீடு சேதம்

## 5 பேர் காயம்



நுவரெலியா – கினிகத்தேனையில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக பொல்பிட்டிய மாதெனியாவத்தயிலுள்ள வீடொன்றில், நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை, மண் மேடு சரிந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் வீட்டிலிருந்த தாய் மற்றும் அவரது மகள் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் மண் மேடுக்குள் சிக்கியிருந்தவர்களைப் பிரதேச மக்கள் மற்றும் லக்ஸ்ஸபான இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து மீட்டுள்ளனர்.

இதேவேளை கன மழை தொடர்ந்து பெய்து வருகின்றமையால் நோர்ட்டன் பீரிஜ், விமலசுரேந்திரா நீர்தேக்கத்தின் ஒரு வான் கதவு தற்போது திறக்கப்பட்டுள்ளதாகவும் இதே நிலைமை தொடர்ந்து நீடிக்குமாயின் ஏனைய வான் கதவுகளும் திறக்கப்படும் எனவும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# மல்லாகம் ஆலயத்தில் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் 25 இற்கும் மேற்பட்டோர் குடும்பத்துடன் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம் – மல்லாகத்திலுள்ள அம்மன் ஆலயமொன்றில், நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்படிருந்த அன்னதான நிகழ்வைப் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினர் தடுத்தி நிறுத்தியுள்ளனர்.

மேலும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட 25 இற்கும் மேற்பட்டவர்களை குடும்பத்துடன் தனிமைப்படுத்தலுக்கு சுகாதாரப் பிரிவினர் உட்படுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை குறித்த ஆலயத்தில், அன்னதானம் வழங்குவதற்கான சிறப்புப் பூஜை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெல்லிப்பழை பொலிஸார் மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுக்கு ரகசிய தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலுக்கமைய அந்த இடத்துக்குச் சென்ற அவர்கள், அன்னதான நிகழ்வைத் தடுத்து நிறுத்தியமையுடன் அதில் பங்கு கொண்டிருந்தவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனவிடுதலைக்காகப் போராடிய இனம் இன்று உறவுகளின் கல்லறைக்காக போராடுகின்றது

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் காட்டம்



மிகப் பெரிய தமிழினப் படுகொலையின் சாட்சியாகிய முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இனப்படுகொலைக்கு உள்ளாக்கியவர்களே இரவோடு இரவாக இடித்து அகற்றியது பாசிச ஆட்சியின் வெளிப்பாடாக உள்ளது என தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

தமிழர்களின் கல்லறை நினைவுகள் கூட இந்த மண்ணிலே இருக்கக் கூடாது என்பதில் சிங்கள தேசம் பெரும் முனைப்புக் கொள்கிறது என்பது சோதனையே.

அழுவதற்கு கூட அழித்தவனிடம் அனுமதி கோரும் துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்களின் வாழ்வியல் காணப்படுவதே மிகுந்த வேதனையான விடயம்.

இன அழிப்பு யுத்தம் முடிவுற்று 12 ஆண்டுகள் கடந்து விட்ட போதும் தமிழர்களைக் கனவில் கூட எதிரியாக நோக்கும் மனோ நிலையில் இருந்து சிங்கள தேசம் விடுபடவில்லை.

இன்னும் இராணுவ அடக்கு முறையும் அதன் மேட்டிமைவாத கட்டமைப்புக்களும் தமிழ் மக்களுக்குத் தொடர் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் வாழ்வில் இருப்புக்கான சமூக நீதிக்கான கோட்பாடு என்பது அடக்கு முறையின் அடையாளமாகவே மேலிடையிடுகின்றது.

இந்த நோக்கில் இருந்து விடுபடாத வரை நல்லிணக்கம், சகவாழ்வு, இனத்துவ ஐக்கியம் என்பவை கிஞ்சித்தும் சாத்தியப்படப்போவது இல்லை.

கடந்த 12 ஆண்டுகளாக நீதி கோரி உலகின் சகல வாயில்களையும் தட்டிய எம்மினம் உறவுகளுக்காக பொது வெளியில் ஓலமிட்டு அழ முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டது என்பது உலகில் எந்த இனத்திற்கும் ஏற்படக்கூடாத பெரும் சாபமே.

இன விடுதலைக்காக வீறு கொண்டு போராடிய இனம் உறவுகளின் நினைவுக் கல்லறைகளுக்காகப் போராட வேண்டிய கொடுமைக்குள் உள்ளாக்கப்பட்டுள்ளது என்பது சகிக்க முடியாத பெரும் துன்பமே.

இனப்படுகொலை நினைவுகளைத் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து அகற்றி விடலாம் என்று அரசு படாத பாடுபடுகிறது. அதற்கு கொரோனாவும் துணை நிற்கிறது. ஆனால் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து இனப்படுகொலையை மறந்து விடமாட்டோம்.

ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேருக்கான பதிலை அரசு என்றோ ஒரு நாள் பதில் கூறியே ஆக வேண்டும்.

அது வரை நீதிகோரிய எமது நெடும் பயணம் தொடரவே வேண்டும். றணங்களும், வலிகளும், ஏமாற்றங்களும் எமக்குப் புதியவை அல்ல.

அதைக் கண்டு நாம் அச்சப்பட கோழைகளும் அல்லர் என்பதை சிங்கள தேசம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

மனிதாபிமானத்தைக் கூட விலை பேசும் கொடுங்கோல் ஆட்சியாளர்களிடம் இதை விட வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

ஆகவே தடைகளை மீறி இன அழிப்புக்குள்ளான எம் உறவுகளுக்காக மே 18 இல் உணர்வு பூர்வமாக அஞ்சலிப்போம்.– என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நினைவுக் கல்லுக்குப் பொறுப்பு பொலிஸும் இராணுவத்தினருமே

## செ.கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



அரசாங்கம் செய்த படுகொலைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல விடாமல் தடுத்து உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு கொடுத்து சர்வதேச சக்திகளுக்கு தேவையாக தமிழர்களின் விவகாரம் பயன்படுத்தப்படுவதற்கு துணை நின்றவர்களும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி உடைப்புக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சேதப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குறித்த இடத்துக்கு வருகை தந்து பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்தெரிவிக்கையில் –

காவற்துறையினரும், இராணுவத்தினரும் உள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவிற்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் இந்த நினைவுக்கல்லிற்கு பொறுப்பு காவற்துறையினரும், இராணுவத்தினரும் தான். இவர்களுக்கு தெரியாமல் நினைவுக்கல் அகற்றப்பட்டிருக்க முடியாது.

கோட்டாபய அரசாங்கம் தான் 2009 ஆம் ஆண்டு போர் நடைபெற்றபோது பாதுகாப்பு செயலாளராகவும், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் இருந்தார்கள். அவர்களால் மேற்கொள்ளப்பட்டது தான் திட்டமிட்ட இனப்படுகொலை.

இந்த இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை என்பதைத் தமிழர்கள் கோரியிருந்தார்கள். இந்த நிலைமையில் நினைவேந்தலை செய்ய முடியாமல் நினைவுக்கல்லைக் கூட நாட்ட முடியாமல் இராணுவத்தினராலும், காவற்துறையினராலும் நெருக்கடிகள் கொடுப்பது என்பது கண்டிக்கத்தக்க விடயம்.

குறித்த நினைவுக்கல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இந்த தெருவெங்கும் தமிழர்கள் மீது இனவழிப்பு செய்த இராணுவத்தினருக்கு நினைவுச்சின்னங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த மண்ணுக்குச் சொந்தக் காரர்களான தமிழர்களுக்கு அவர்கள் மண்ணில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்ற இடத்தில் உறவினர்களால் வணக்கம் செய்ய முடியாதளவிற்கு ஒரு நெருக்கடி நிலைமை இருக்கின்றது.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலைக்கு ஒரு சர்வதேச குற்றவியல் விசாரணை நடைபெறாமல் உள்ளக விசாரணைக்கு பத்து ஆண்டுகளாக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வந்ததன் மூலமாக அவர்கள் தப்பித்து வந்ததன் விளைவாக தாங்கள் எதைச் செய்தாலும் அதற்கு பொறுப்புக்கூறத் தேவை இல்லை என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்ற நிலமையில், தான் இந்த காடைத்தனத்தைச் செய்கின்றார்கள்.

குறிப்பாக கோட்டாபய அரசாங்கம் பதவியில் இருக்கின்ற பொழுது கூட கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் 44.1 தீர்மானம் என்கின்ற உள்ளக விசாரணை தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதன் எதிரொலியாகத்தான் நாங்கள் இதனைப் பார்க்கின்றோம்.

படையினரும், காவற்துறையினரும் பதவியில் இருக்கின்ற கோட்டாபய அரசாங்கம் மட்டுமல்ல அரசாங்கம் செய்த படுகொலைகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லவிடாமல் தடுத்து உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு கொடுத்து சர்வதேச சக்திகளுக்கு தேவையாக தமிழர்களின் விவகாரம் பயன்படுத்தப்படுவதற்கு துணை நின்றவர்களும் இதற்குப் பொறுப்பு கூற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தளிழிப்பு வன்மையாகக் கண்டிக்கின்றார் கனடா எம்.பி.



முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் உள்ள நினைவு முற்றத்தில் இருந்த நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டமை குறித்து கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் உள்ள நினைவு முற்றத்தில் இருந்த நினைவுத்தூபி கடந்த வியாழக்கிழமை அதிகாலை சேதமாக்கப்பட்டதுடன், நடுகை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டிருந்த பாரிய நினைவுக்கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைக்கு எதிராகப் பல்வேறு தரப்பினர்களும் தமது கண்டனத்தையும், எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில் தற்போது கரி ஆனந்தசங்கரி தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாகத் தனது டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் எண்ணற்ற இழப்புகளைச் சந்தித்த தமிழ்த் தேசத்துக்கு மே மாதம் துக்கம் மற்றும் பிரதிபலிப்பு நேரமாகும்.

இந்நிலையில், இலங்கைப் படைகளால் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான நினைவுதூபியை அழிக்கும் செயற்பாடுகண்டிக்கத்தக்கசெயல்எனஅவர்வலியுறுத்தியுள்ளார்.

# ரயில் சேவைகள் அனைத்தும் திங்கள் வரை இடைநிறுத்தம்

ரயில் சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் அனைத்து ரயில் சேவைகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

நாடு தழுவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காரணத்தால் இவ்வாறு ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி இந்த மூன்று தினங்களில் எந்தவொரு ரயிலும் சேவையில் ஈடுபடுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை ரயில்வேத் திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனவிரட்ன ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான பயண தடையை நீடித்துள்ளது பிலிப்பைன்ஸ் அரசு

இலங்கையிலிருந்து செல்லும் பயணிகள் மீதான தடையை பிலிப்பைன்ஸ் நீடித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் மற்றும் இலங்கையிலிருந்து வரும் பயணிகளுக்கு தற்போதுள்ள அனைத்து பயணக் கட்டுப்பாடுகளும் 2021 மே 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் ஹாரி ரோக் தெரிவித்தார்.

எதிர்வரும் பதின்னான்கு (14) நாள்களுக்கு ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் அல்லது இந்த இரு நாடுகளுக்கும் 2021 மே 15 முதல் மே 31 வரை பிலிப்பைன்ஸுக்குள் நுழையத் தடை விதிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார் .

# மாணவர்களுக்கு அடிப்படைவாதத்தை போதித்த நபர் மூதூரில் வைத்து கைது

திருகோணமலை – மூதூர் பிரதேசத்தில் மாணவர்களுக்கு அடிப்படைவாதத்தை போதித்த நபர் ஒருவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு குறித்த நபர் அடிப்படைவாதத்தை போதித்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மூதூர் இக்பால் வீதியைச் சேர்ந்த 38 வயதான நபரையே பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.


கடந்த 2018 ஆம் ஆண்டில் இந்த அடிப்படைவாத வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறித்த நபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



# பாட்டும் நானே? பாவமும் நானே!

‘கம்பவாரிதி’ இலங்கை
ஜெயராஜ் தமது
‘உகரம்’ இணையத்தளத்தில்
‘பாட்டும் நானே! பாவமும் நானே!’
என்ற தலைப்பில் வாராந்தம் வரையும்
கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’
நாளிதழில் ஒவ்வொரு வாரமும்
வெளியாகி வாசகர்களின்
அறிவுக்கு தீனியாகிறது.



**1. கேள்வி:-** மூச்சுக் காட்டக்கூடாது என்று சொல்லி யாரிடமாவது அடி வாங்கியிருக்கிறார்களா?

**பதில்:-** ஏன் இல்லாமல்? கொரோனாவிடம் எல்லோரும்தான் வாங்குகிறோமே!

உலகநாதரின் ஒப்பீனியன் * **‘கிருமியின் கிளர்ச்சி’**

* * *

**2. கேள்வி:-** கொரோனாப் பாதிப்புப் பற்றி உலக நாடுகள் முழுவதும் நாளாந்தம் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அது தொடங்கிய நாடான சீனாவிடமிருந்து மட்டும் எந்த ‘அசுமாத்தத்தை’யும் காணவில்லையே. அது பற்றி சீனாவிலிருந்து யாரும் மூச்சுக்கூட விட மாட்டார்களா?

**பதில்:-** மக்களின் தொண்டைக்குழியில் அழுத்தியிருக்கும் தமது கரங்களை, சீன ஆட்சியாளர்கள் எடுத்தால்தானே மூச்சு வெளியில் வரமுடியும்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **இலங்கையர் மூச்சு எப்போ நிற்குமோ?**

* * *

**3. கேள்வி:-** மகாராணியின் மறைந்த கணவர் இளவரசர் பிலிப் பற்றி நீங்கள் எதுவும் பேசாதமை ஏன்?



**பதில்:-** பாவம். அரசர் என்ற பெயரில் இருந்த அடிமை அவர். அவரைப் பற்றி என்னத்தைப் பேச?

உலகநாதரின் ஒப்பீனியன் * எல்லாக் கணவர்களும் அடிமைகள்தான். பிரம்மச்சாரிக்கு அது எப்படித் தெரியப் போகிறது. ஹி..ஹி..

* * *

**4. கேள்வி:-** எதிர்க்கட்சித் தலைவர் ‘சஜித்தை’ வெளிநாட்டுத் தூதுவர்கள் ஏன் அடிக்கடி சந்திக்கிறார்கள்?



**பதில்:-** முன்பொருமுறை வெளிநாட்டுத் தூதுவர்களின் கூட்டம் ஒன்றில் அப்போதைய இந்திய தேசாதிபதியாக இருந்த ‘சர்வபள்ளி’ இராதாகிருஷ்ணன் அவர்கள் தூதுவர்கள் என்பவர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒற்றர்கள் எனக்கூறி சர்ச்சைக்கு ஆளானதாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன். எது எப்படியோ அவர் சொன்னது உண்மை என்பதில் மட்டும் ஐயமில்லை. தூதர்கள் (ஒற்றர்கள்) எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்றால் ஆளுங்கட்சிக்கு எங்கோ குழிவெட்டப்படுகிறது என்றுதான் அர்த்தம்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **மீண்டும் ஒரு ‘நல்லாட்சி’ அரசாங்கமா?**

* * *

**5. கேள்வி:-** புதிய கொரோனாவைத் தடுக்க இரண்டு முகக்கவசங்களைப் போடவேண்டும் என்கிறார்களே?

**பதில்:-** அடுத்தடுத்த ஆண்டுகளில் தலையணையை முகக்கவசமாகக் கட்டவேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

உலகநாதரின் ஒப்பீனியன் * **இந்தக் கிண்டல் தானே வேணாங்கிறது.**



**6. கேள்வி:-** முதலமைச்சராய் ‘ஸ்ராலினின்’ ஆரம்பச் செயற்பாடுகள் எப்படி?

**பதில்:-** பாராட்டும்படியாகத்தான் இருக்கிறது.

அமைச்சரவையில் மகனுக்கு இடம் கொடுக்காதது.

உறவுப்பகைகளை மன்னித்து அணைத்து நடப்பது (அழகிரி விடயத்தைச் சொல்லுகிறேன்.)

தகுதியுள்ள செயலாளர்களை தேர்ந்து நியமித்திருப்பது.

வரக்கூடிய நஷ்டத்தை நினையாமல் நாட்டு மக்களின் நலனை நினைந்து, கொரோனாத் தடுப்பு முயற்சியாக இரண்டு வார ஊரடங்கை அறிவித்திருப்பது.

அரச பேரூந்துகளில் பெண்களுக்கான இலவசப் பயணத்தை அறிவித்திருப்பது.

மாற்றுக்கட்சியினரை மதித்து நடக்கும் புதுப்பாதையைத் திறந்திருப்பது.

அமைச்சர்களுக்கான கடும் ஒழுக்கக் கோவையை அறிவித்திருப்பது.

ராஜீவ் கொலையில் குற்றவாளிகளாக்கப்பட்டிருக்கும் எழுவரின் விடுதலைக்கான முயற்சியைத் தொடங்கியிருப்பது.

– இப்படி எடுத்திருக்கும் ஆரம்ப அதிரடி நடவடிக்கைகள் ஒரு சிறந்த தலைவராய் அவர் ஆகிவிடுவாரோ என்று நினைக்க வைத்திருக்கின்றன.

உலகநாதரின் ஒப்பீனியன் * **புதுசுக்கு வண்ணானாய் இருக்காதோ?**

* * *

**7. கேள்வி:-** முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் அப்போது அவருடன் கடற்படையில் இயங்கிய இப்போதைய அமைச்சர் சரத் வீரசேகர அவர்களுக்கும் இடையில் நடக்கும் வெட்டுக் கொத்துக்களைக் கவனித்தீர்களா?



**பதில்:-** படைகளில் இருந்த போது இருந்த கட்டுப்பாடு அரசியலுக்கு வந்ததும் இல்லாமல் போய்விட்டதிலிருந்து நமது அரசியலின் இலட்சணம் புரிகிறது. சுருங்கச் சொன்னால் அவர்களுக்குத் தெரிந்த தொழிலை அவர்கள் செய்கிறார்கள். அதில் என்ன தவறு?

உலகநாதரின் ஒப்பீனியன் * **அவர்களுக்குத் தெரிந்த தொழில் என்று எதைச் சொல்லுகிறார்.**

**‘வெட்டுக் கொத்தையா’? வாரிதிக்கு ரொம்பத்தான் குசும்பு.**

* * *

**8. கேள்வி:-** கொரோனா சம்பந்தமான மருத்துவ சங்கங்களது ஆலோசனைகளை அரசாங்கம் ஏற்பதாய்த் தெரியவில்லையே?

**பதில்:-** ‘உற்ற நோய் நீக்கி உறா அமை முற்காக்கும் பெற்றியார் பேணிக் கொளல்.’ என்கிறார் திருவள்ளுவர். தெய்வத்தால் உண்டான நோய்களை நீக்கி அத்தகைய நோய்கள் பின்னும் வராமல் தடுக்கவல்ல தன்மையுடையவர்களை அரசன் துணையாகப் பேணிக்கொள்ளல் வேண்டும் என்பது இக்குறளுக்கான அர்த்தம். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று இல்லாமல் அரசியல்வாதிகள் அத்தனைபேரையும் திருக்குறள் படிக்க வைக்கவேண்டும்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **தண்ட தொழிலுக்குப் பாதை வெட்டுறார் போல. ஹி..ஹி..**

* * *

**9. கேள்வி:-** திருவள்ளுவர், ஓர் உயிரைக் கொன்று தின்னாமல் இருப்பது ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட சிறந்தது என்கிறாரே. அப்படியானால் அவருக்கு வேதங்களின் மீதும் அவை சொல்லும் வேள்விகள் மீதும் நம்பிக்கை இல்லையோ? அவரை நாத்திகர் என்பதா? சமூகப் புரட்சியாளர் என்பதா? நீங்களே சொல்லுங்கள்!

**பதில்:-** வள்ளுவர் வேதங்களையும் வேதங்கள் சொல்லும் வேள்விகளையும் இழிவுபடுத்துவதாய் நினைக்கும் உங்கள் எண்ணம் தவறு.

திருவள்ளுவர் வேள்விகளைக் குறைத்துச் சொல்லவில்லை. ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட ஓர் உயிரைக் கொன்று உண்ணாமல் விடுவது நல்லது என்றுதான் சொல்லியிருக்கிறார். அவரது கூற்றிலிருந்து நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒப்பீடுகள் செய்கிறபொழுது ஒரே தன்மையுள்ள இரண்டு விடயங்களைத்தான் ஒப்பிடுவார்கள். உதாரணத்திற்கு – லட்டைவிட பாயாசம் நன்றாய் இருந்தது என்று சொல்வார்களே தவிர சாம்பாரைவிட பாயாசம் நன்றாய் இருந்தது என்று சொல்லமாட்டார்கள். காரணம் லட்டு, பாயாசம் இரண்டும் இனிப்பானவை என்ற வகையில் ஒத்த தன்மை கொண்டவை. சாம்பாரில் அந்த ஒத்ததன்மை இல்லை என்பதுவேயாகும்.



இந்த அடிப்படையை வைத்துச் சிந்தித்தால், ஓர் உயிரைக் கொலை செய்து உண்ணாமல் விடுவது என்பது ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிடச் சிறந்தது என்று வள்ளுவர் சொன்னதன் மூலம் உயிர்க் கொலையை செய்யாமல்விடும் புண்ணியத்திற்கு ஒத்ததொன்றாகவே வேள்விகளையும் அவர் கருதியிருக்கிறார் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அதனால் வேள்விகளின் உயர்வையும் அவர் அங்கீகரிக்கிறார் என்பது தெரிய வருகிறது. உங்கள் புரிதலில்தான் தவறு!

சுருக்கமாகச் சொல்வதானால், வள்ளுவர் நீங்கள் சொன்ன வகையறாக்களுக்குள் அடங்காமல் வேத வழி வந்த ஒரு வித்தாகவே தன்னை நிரூபித்திருக்கிறார் என்பதுதான் சரியான முடிவாம்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **இவர்கள் எங்களைப் ‘பலி’ வாங்காமல் விடமாட்டார்கள் போல.**

* * *

**10. கேள்வி:-** கொரோனாவைக் காரணங்காட்டி ஆலய வழிபாடுகளைக் குறைப்பது சரியா?

**பதில்:-** ஆலய வழிபாடுகளைக் குறைக்கலாம். ஆனால் வழிபாட்டைக் குறைக்கக் கூடாது.

உலகநாதரின் ஒப்பீனியன் * **கடவுள் ஏன் கல்லானான், கல்லாய்ப் போன மனிதர்களாலே.**



அகதிகளுக்கான கொரோனா நடவடிக்கை நிலையம்

# தமிழ்நாட்டில் ஈழ அகதிகள்; கொரோனா தொற்றினால் கொட்டகைகளில் வாழ்க்கை!

(ந.லோகதயாளன்)

தமிழ்நாட்டில் ஈழ அகதிகள் தங்கியுள்ள அகதிகள் முகாமில் இதுவரை 7 முகாம்களில கொரோனாத் தொற்று பரவியுள்ளது. அப்படி தொற்று அடையாளம் காணப்பட்டவர்களுக்கு முகாம்களிலேயே கொட்டில்கள் அமைக்கப்பட்டு தனிமைப்படுத்தல் வழங்கப்படுவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் நூற்றுக் கணக்காண அகதிகள் முகாமில் ஈழ அகதிகள் 75 ஆயிரம் பேரளவில் தங்கியுள்ளனர். இவ்வாறு ஈழ அகதிகள் தங்கியுள்ள பல முகாம்களில் இருந்து தப்பித்து மீண்டும் தாயகம் திரும்புவோர் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் தமிழ்நாட்டில் இதுவரை 7 முகாம்களில் உள்ள பலர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆள்கள் தப்பித்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

### ஈழ அகதிகள் முகாமிலும் கொரோனா பரவியுள்ளது

இதுவரை மண்டபம் முகாம், திருச்சி கொட்டப்பட்டி முகாம் உட்பட 7 முகாம்களில் அதிகமாகவும் மேலும் இரு முகாமில் ஒரு சிலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் கொரோனாத் தொற்றாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்றாலும் அவர்களது குடும்பம் அந்த நெருங்கிய முகாம்களிலேயே தனியான கொட்டகைகளில் தங்க வைக்கப்படுவதாகவும்

இதேநேரம் தற்போது முகாம்களில் தனியாக அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் கொட்டகைகளில் 21 பேர் கொரோனாத் தொற்றுடன் உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

“இவ்வாறு ஒரே வளாகத்திற்கு உள்ளேயே அருகில் கொட்டகை அமைத்து கொரோனாத் தொற்றாளர்களைத் தங்க வைத்திருப்பதே எமக்குப் பெரிய உளவியல் தாக்கமாகவும் அச்சமாகவும் உள்ளது. ஈழத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக அனைத்து உடைமைகளையும் இழந்து உயிர் தப்பினால் போதும் என்பதற்காக ஆபத்தான பயணம் மூலம் தமிழகம் வந்தபோதும் தற்போது கொடிய நோயில் அகப்படுவோமோ என்ற அச்சமே மீண்டும் தாயகம் திரும்பினால் என்ன என்ற மனக் குழப்பத்திற்குள் தள்ளுகின்றது.” – என்கின்றனர் அவர்கள்.


ஈழ அகதிகளின் வாழ்விடம்

### முகாம்களில் வாழும் ஈழத் தமிழரர்களின் நிலைமை

“இந்தியாவில் நாம் வாழும் முகாம்களானாலும் வெளியில் தங்கியுள்ளவர்களானாலும் இன்றும் இலங்கையில் எமது உறவுகள் வாழும் சுதந்திரத்தை விடவும் இங்கு நிம்மதியாக வாழ்கிறோம் என்றே எண்ணுகின்றோம். இருப்பினும் இங்கும் பல பிரச்சினைகள், நெருக்கடிகள் இருக்கின்றன. இங்கே மின்சாரம், வைத்தியம் இலவசம். அதேநேரம் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு 150 ரூபா ( இந்திய நாணயம் ) வாழ்வாதாரத்திற்கு போதுமானது. ஆனால் இத்தொகையில் இலங்கையில் வாழ முடியாது. இதேநேரம் எமது பிள்ளைகள் இந்தியாவில் கற்றுள்ளனர். இந்திய சான்றிதழுடன் இலங்கையில் அவர்கள் தொழில் செய்ய முடியாது. இவற்றினாலேயே தாயகம் திரும்ப மனம் இன்றி இருந்தோம். இருப்பினும் தற்போது கொரோனா மீண்டும் தாயகம் நோக்கி இழுக்கின்றது.” – என்கின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள மண்டபம் முகாம் மட்டுமல்ல, பல முகாம்களில் எமது இருப்பிடம் மாட்டுக்கொட்டில் போன்றே இன்றும் உள்ளது. அதாவது 1990ஆம் ஆண்டு இருந்த கட்டடங்கள். அவற்றில்தான் வாழ்க்கை. இருப்பினும் எமது உயிருக்காக இங்கு வந்துபின்னர் இதுவே,தற்போது 20, 30 ஆண்டுகால வாழ்வியல முறைமையாகிவிட்டது என்கின்றனர்.

### திருகோணமலையைச் சேர்ந்த மற்றொருவரின் ஆதங்கம்

திருகோணமலையை சொந்த இடமாக கொண்ட 32 வயது பெண்மணி தகவல் தருகையில் –

நான் மன்னாரில் திருமணம் செய்து 12 ஆண்டுகளிற்கு முன்பு தமிழகம் வந்து முகாமில் வாழும் நிலையில் இரு பிள்ளைகளும் முகாமிலேயே பிறந்து இன்று கல்வி கற்கின்றனர். எமக்கு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாவும் அடுத்தவருக்கு 750 ரூபாவும் சிறுவர்களிற்கு 400 ரூபா என்ற அடிப்படையில் தற்போது மாதாந்தம் 2 ஆயிரத்து 550 ரூபா கிடைக்கும் ஆனால் மாதம் 12 ஆயிரம் ரூபாவில் இருந்து 15 ஆயிரம் ரூபா குடும்பச் செலவிற்கு வேண்டும். ஏனெனில் ஒரு கிலோ மீன் 250 ரூபா விற்பனையாகும்போது 4 பேர் கொண்ட எமக்கு 2 ஆயிரத்து 550 ரூபா ஒரு கிழமைக்கே போதுமானது.

இருந்தபோதும் கணவர் வெளியில் கூலி வேலை கிடைத்தால், அதற்குச்செல்வதன் காரணமாகவே திருப்தியாக உணவு கிடைக்கின்றது. இந்த அவலம் வேண்டாம் என நாடு திரும்ப பதிவு செய்துள்ளேன்.


அகதிகளுக்கான நிவாரணக் கடை

ஆனால் கொரோனா தடையாகவுள்ளது என்றார்.

எம்முடன் உரையாடிய மூவரும் தமது பெயர் அடையாளம் வெளிவருவதனை விரும்பவில்லை.

### இந்திய முகாம் அதிகாரிகளின் பதில்

இதேநேரம் தமிழக முகாம்களில் இருப்போர் நாடு திரும்ப விரும்பினால் அனுப்ப தயாராகவே உள்ளோம். அதற்காக ‘ஒவர்’ நிறுவனத்தின் ஊடாக ஐ.நாவின் அகதிகள் தூதரகம் மூலம் விமானத்தில் சகல செலவும் பொறுப்பேற்று இலவசமாகவே அனுப்பி வைக்கப்படுகின்றனர். தற்போதைய கொரோனாவினால் மட்டுமே விமான சேவை இடம்பெறவில்லை. திருட்டுத்தனமாக கடல்வழியாக படகுகளில் செல்பவர்களில் அதிகமானோர் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளிற்கு தப்பிச் செல்ல முயன்றவர்கள், திருட்டுத் தனமாக இந்திய கடவுச் சீட்டு பெற முயன்றோர் அல்லது ஏதாவது குற்றம் புரிந்தவர்கள் எனில் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படும்போது வழக்குச் செலவு, சட்டத்தரணி செலவு , இதற்கான போக்கு வரத்து என்பன இலவசமாக வழங்கப்பட மாட்டாது.

இதனால் இந்த வழக்குகளிற்கு அதிக செலவு ஏற்படும் நிலைமையிலேயே படகுகள் மூலம் பலர் இலங்கைக்கு தப்பிச் செல்கின்றனர் என இந்திய முகாம் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

> குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாவும் அடுத்தவருக்கு 750 ரூபாவும் சிறுவர்களிற்கு 400 ரூபாவே வழங்கப்படுகின்றது. இதன்படி 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு 2 ஆயிரத்து 550 ரூபா கிடைக்கும் ஆனால் மாதம் 15 ஆயிரம் ரூபா குடும்பச் செலவிற்கு வேண்டும். ஏனெனில் ஒரு கிலோ மீன் 250 ரூபா ஆகும்.




ஈழ அகதிகளின் வாழ்விடங்கள்

# ரமழானை முன்னிட்டு திட்டமிட்டு போக்குவரத்து கட்டுப்பாடுகள் இனவாத போக்கில் பயணித்தால் நாடு பின்னடைவை சந்திக்கும்

## கடும் காட்டத்துடன் எச்சரிக்கின்றார் முஜிபுர் ரஹ்மான்



ஏப்ரல் முதல் வாரத்திலேயே கொவிட் பரவல் தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் அரசாங்கத்துக்கு அறிவித்திருந்த போதிலும், உரிய நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால் இப்போது ரமழான் பண்டிகையைக் கொண்டாட விடாமல் திட்டமிட்டு அரசாங்கத்தால் இனவாத ரீதியிலான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

இலங்கையில் ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலேயே போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு சுகாதாரத் தரப்பினர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.


எனினும் அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. மாறாக 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களை அச்சிட்டு நாட்டு மக்களுக்கு வழங்கி வீடுகளில் இருந்தவர்களையும் வெளியில் நடமாட சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் மூலம் வைரஸ் பரவல் தீவிரமடைந்தது.

வைரஸ் பரவல் தீவிரமடைய ஆரம்பித்த கால கட்டத்திலேயே போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தால் இன்று இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்காது. எனினும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் நாட்டை முடக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை என்று கூறினர்.

ரமழான் பண்டிகையைக் கொண்டாட விடாமலாக்குவதற்குத் திட்டமிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான ரீதியாக இன்றி, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இனவாத ரீதியில் அரசாங்கம் தீர்மானங்களை எடுத்துள்ளமை இதன் மூலம் தெளிவாகிறது. இவ்வாறு இனவாத ரீதியிலேயே அரசாங்கம் சென்று கொண்டிருந்தால் நாடு பெரும் பின்னடைவையே சந்திக்கும். – என்றார்.

# ஆயிரக்கணக்கான பாவித்த காசோலைகள் ஏ9 வீதியின் மூன்று இடங்களில் விசிறல்





ந.லோகதயாளன்.

ஏ9 வீதியில் 3 இடங்களில் தனியார் வங்கி ஒன்றிற்கு உரித்தான ஆயிரக்கணக்கான காசோலைகள் வீசப்பட்டுக் காணப்படுகின்றன.

5 தொடக்கம் 7 ஆண்டுகள் வரையான பழைய காசோலைகளே இவ்வாறு வீதிகளில் வீசப்பட்டு காணப்படுகின்றன. இவ்வாறு வீசப்பட்டு காணப்படும் காசோலைகள் அனைத்தும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு பணப் பரிமாற்றம் மேற்கொண்ட காசோலைகளாகவும் உள்ளன.

வடக்கு மாகாணத்திற்கு வெளியே உள்ள இரு கிளைகளினது காசோலைகளே நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை வீசப்பட்டுக் காணப்படுகின்றமையால் இது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இந்த காசோலைகள் மூலம் இனி எந்தவகையிலும் நிதிமோசடி மேற்கொள்ள முடியாது என உறுதிபடத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் கணக்காய்விற்கு உட்படுத்தி அழிக்கப்பட வேண்டிய காசோலையை வங்கியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் விசிறப்பட்டனவா என்றும் சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

# மடுக்கரை கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நேரடி களவிஜயம்

மன்னார், மே 15

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மடுக்கரை கிராம மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்தார்.

மடுக்கரை மக்கள் இருபது வருடங்களாகத் தமது வாழ்வாதாரத்துக்காகச் செய்துவரும் நெற் பயிர்ச் செய்கையை இம்முறை திடீர் என கமநலசேவைதிணைக்களம் நிறுத்துமாறு கூறியுள்ளது.

இந்தக் கிராம மக்கள் அன்றாட கூலி வேலைகளும் தோட்டங்களும் செய்தே வருகின்றனர். வீட்டுக் காணியில் கால் ஏக்கர் நிலத்தில் செய்யும் நெற் பயிர்ச்செய்கையிலே தமது உணவுத் தட்டுப்பாடு பூர்த்தி செய்யப்படுவதாகக் கூறினார்கள். இதை தடைசெய்வதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் தாம் எதிர்காலத்தில் பாரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாகத் தொடர்பு கொண்டு இம் மக்களின் நியாயமான கோரிக்கையை தெளிவுபடுத்தியதுடன் இந்தச் செயற்பாட்டை இம் முறை சாதகமான முறையில் பரிசீலிக்குமாறும் எதிர்காலத்தில் இவர்களுக்கு மாற்று வயல்காணிகள் வழங்க திட்ட வரைவை சமர்ப்பிக்குமாறும் கூறினார்.

# பயணத்தடையால் வவுனியா முடக்கம்

## தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் பொலிஸார்



நாடு பூராகவும் முழுமையான பயணத்தடை நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் அமுலாகியுள்ள நிலையில் வவுனியா நகரம் முழுமையாக முடங்கி வெறிச் சோடிக் காணப்படுவதுடன், தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். வவுனியா நகரில் மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், வீதிகளில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மருந்தகங்கள், சுகாதாரத் துறையினர், ஆடைத் தொழிச்சாலையினர், விவசாயிகள் தமது தேவை நிமித்தம் சென்று வருகின்றமையுடன் பொது மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வீதியால் செல்வோரை மறித்து பொலிஸார் திருப்பி அனுப்புவதையும் அவதானிக்க முடிகிறது. (100)

# அயலவர்களால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டான் 12 வயது சிறுவன்

## பொலிஸார் அலட்சியப் போக்கு என மக்கள் குற்றச்சாட்டு

அயலவர்களால் கூரிய ஆயுதத்தால் 12 வயதுச் சிறுவன் தாக்கப்பட்ட சம்பவம் கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை பதிவாகியுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பாள்குளம் பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த வியாழன் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

வேலியை சீர் செய்வதற்காகச் சென்ற சிறுவன் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளான் எனவும், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டமையால் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு அழைத்து சென்று சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது எனவும் பாதிக்கப்பட்ட சிறுவனின் தாயார் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் 119 எனும் அவசர அழைப்பிற்கு தகவல் வழங்கப்பட்டும் பொலிஸார் விசாரணை மேற்கொள்ளத் தவறியுள்ளதாகா எனவும், வியாழக்கிழமை காலை 11 மணியளவிலேயே ஆரம்ப விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் அலட்சியமாகச் செயற்பட்டுள்ளனர் எனப் பாதிக்கப்பட்டோர் குற்றஞ்சாட்டுகின்றனர். குறித்த தாக்குதல் சம்பவத்தில் 12 வயதுடைய தர்சிகன் என்ற சிறுவனே பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பான பூர்வாங்கள விசாரணைகளை மேற்கொண்டு, தாக்கப்பட்ட சிறுவனுக்கு நீதி பெற்றுத்தரவேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture information


## வீட்டுத்தோட்டத்தில் வளர்க்க கூடிய பதினாறு மூலிகைகள்

| | |
|---|---|
| பொன்னாங்கன்னி | துளசி |
| அகத்தி | தூதுவளை |
| கறிவேப்பிலை | கற்றாழை |
| வேம்பு | புதினா |
| வல்லாரை | பிரண்டை |
| இஞ்சி | முசுமுசுட்டை |
| மஞ்சள் | மணத்தக்காளி |
| வெற்றிலை | கற்பூரவள்ளி |



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# பள்ளிவாசல்கள் மூடப்பட்டிருந்த நிலையில் வவுனியாவில் வீடுகளிலே நோன்பு பெருநாள்



நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தாக்கம் காரணமாக சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வவுனியாவில் பள்ளிவாசல்கள் மூடப்பட்டிருந்த நிலையில் முஸ்லிம் மக்கள் தமது வீடுகளில் அமைதியான முறையில் நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களும் மூடப்பட்டிருந்தன. இதனால் முஸ்லிம் மக்கள் தமது வீட்டு வளாகத்திலும், வீட்டு மொட்டை மாடிகளிலும் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் நோன்புப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டதுடன், அமைதியான முறையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நோன்புக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வாரம் இவர்

# சாதிக்க வயது ஒரு தடை அல்ல!

● ப்ரியமதா பயஸ்





# KFC சிக்கன் புகழ்; ஹார்லேண்ட் சாண்டர்ஸ்

ஹார்லேண்ட் சாண்டர்ஸ் என்கின்ற இந்த மனிதர் இப்போது பட்டி தொட்டியெல்லாம் சுவைக்கப்படும் கோழி இறைச்சிப் பொரியலுக்கு சொந்தக்காரர் –ஆனால் நாம் அவர்பற்றியோ அவரின் வரலாறு பற்றியோ *KFC* சிக்கன் என்றால் என்ன? எப்படி வந்தது? என்பது பற்றியோ அறிந்தவர்களாகவும், பலர் அறியாதவர்களாகவும் நன்றாக சுவைத்துவிட்டு, கைகளையும் முகர்ந்து பார்த்துக்கொண்டு. பெரிதாக ஒரு ஏவறை விட்டுவிட்டு கிளம்பி சென்று விடுகிறோம். – அந்த *KFC* சிக்கன் பொரியல் உருவான கதை மிகவும் உருக்கமானதும், அதேநேரம் சுவாரஸ்யமானதும் கூட – இந்த வாரம் காலைக்கதிரின் பிரமுகர் இந்த கோழி இறைச்சிப் பொரியலுக்கு சொந்தக்காரர்தான்.


இவர் 1890 இல் பிறந்த ஒருவர் இந்தியானாவின் ஹென்றிவில்லுக்கு வெளியே ஒரு பண்ணையில் வளர்ந்தார் (கென்டகியின் லூயிஸ்வில்லுக்கு அருகில்). இந்த சாண்டர்ஸுக்கு 5 வயதாக இருந்தபோது, அவரது தந்தை இறந்து விடுகிறார், இதனால் அவருடைய தாயார் கட்டாயமாக ஒரு வேலை செய்யவேண்டிய சூழலுக்கு ஆளாக்கப்படுகிறார் .இதனால் தாயார் ஒரு பதப்படுத்தல் ஆலையில் வேலை செய்யசெல்கிறார், இதனால் சாண்டர்ஸ் மூத்த மகனாகஇருந்தமையால் தனது இரண்டு இளைய உடன்பிறப்புகளைப் பராமரிக்க வேண்டியவராகிறார் அவர் 7 வயதை அடைந்த பிறகு, அவரது தாயார் அவருக்கு எப்படி சமைக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்துள்ளார், சாண்டர்ஸ் தனது 13 ஆவது வயதில் குடும்பத்தை விட்டு வெளியேறி பிறகு, பல தொழில்களைச் செய்யத்தொடங்குகிறார்.

1930 ஆம் ஆண்டில், அப்பலாச்சியன் மலைகளின் விளிம்பில் உள்ள ஒரு சிறிய நகரமான கென்டகியின் வடக்கு கார்பினுக்கு வெளியே அமெரிக்காவில் ஷெல் காஸ் நிரப்பு நிலையத்தில் சாண்டர்ஸ் வேலைக்கு சேர்கிறார்.

அதற்குப்பின்னர் ஒரு குழந்தையாக அவர் கற்றுக் கொண்ட சமையல் குறிப்புகளை வைத்து அவர் முதன் முதலில் ரயில் பயணிகளுக்கு சமைத்து விற்பனை செய்யத் தொடங்குகிறார். வறுத்த கோழி மற்றும் ஸ்டீக்ஸ், country ham போன்ற உணவுகளை அவர் சமைக்க தொடங்குகிறார். நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு சொந்த சாப்பாட்டுக்கடை ஒன்றை நடத்தலாம் என அவர் தீர்மானிக்கிறார்.

1936 ஆம் ஆண்டு ஆளுநர் ரூபி லாஃபூன் கென்டக்கி கர்னல் என்ற கௌரவ பட்டத்தை சாண்டர்ஸுக்கு வழங்குகின்றார் . 1937 ஆம் ஆண்டில் அவர் தனது உணவகத்தை 142 இடங்களுக்கு விரிவுபடுத்தினார், அதற்கு சாண்டர்ஸ் கோர்ட் & கபே என்று பெயரிட்டார்.

இரும்பு பாத்திரத்தில் கோழியை வறுக்க சாண்டர்சுக்கு 35 நிமிடங்கள் எடுத்ததில் அவருக்கு நேரவிரயம் தோன்றியது இதைவிட கோழியைசரியாக முழுமையாக பொரிக்கவும் முடியவில்லை , இது தனது உற்பத்தியின் தரத்தை குறைக்கும் என்று அவர் யோசித்தார் ஓடர்களை முன்கூட்டியே பெற்று கோழியை முன்கூட்டியே பொரித்தால், சில நேரங்களில் நாள் முடிவில் வீணாகி விடும் என்றும் யோசித்தார் . இதனால் 1939 ஆம் ஆண்டில், அழுத்த குக்கர்கள் சந்தையில்விற்பனைக்கு வந்தன, பெரும்பாலும் அவை காய்கறிகளை வேகவைக்க வடிவமைக்கப்பட்டுஇருந்தன சாண்டர்ஸ் அதில் ஒன்றை வாங்கி அதை பிரர் பிரையராக மாற்றினார், பின்னர் அவர் கோழியை வறுக்கவும் அதைப் பயன்படுத்தினார். புதிய முறை உற்பத்தி நேரத்தை மீதப்படுத்தியதோடு கோழியை நன்றாக பொரிக்கவும் உதவியது.



1940 ஜூலை மாதத்தில் , சாண்டர்ஸ் 11 மூலிகைகள் மற்றும் மசாலாப் பொருள்களின் அசல் செய்முறை என்று தனது கோழி பொரியலை அறிமுகம் செய்தார் ஆனால் செய்முறையை அவர் ஒருபோதும் பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை. என்றாலும், அந்தப் பொருள்களில் உப்பு மற்றும் மிளகு ஆகியவை அடங்கும் என்றும் மீதமுள்ளவை எல்லோருடைய அலுமாரியிலும் இருக்கின்றன என்றுமட்டும் கூறினார்.

1952ஆம்ஆண்டில்,சாண்டர்ஸ்தனதுசெய்முறையை நகரத்தின் மிகப்பெரிய உணவகங்களில் ஒன்றான உட்டாவின் தெற்கு சால்ட் லேக்கின் பீட் ஹார்மனுக்கு தனது உரித்தை உரிமையாக்கினார்.

சாண்டர்ஸ் கோர்ட் & கபே போக்குவரத்துப் பயணிகளுக்கு பயன்படும்படியாக இருந்தது, எனவே 1955 ஆம் ஆண்டில் இன்டர்ஸ்டேட் 75 இற்கு புறப்பட்ட பாதை கார்பினைக் கடந்து சென்றபோது, சாண்டர்ஸ் தனது சொத்துக்களை விற்று அமெரிக்காவிற்கு பயணம் செய்தார். சுயாதீன உணவகங்கள் சாண்டர்ஸ் செய்முறைக்கு ஈடாக ஒவ்வொரு கோழியிலும் நான்கு (பின்னர் ஐந்து) காசுகளை ஒரு உரிமக் கட்டணமாகவும், அதை அவர்களின் மெனுக்களில் இடம்பெறுவதற்கும், அவரது பெயரையும் விளம்பர நோக்கங்களுக்காகப் பயன்படுத்த தொடங்குகின்றன.

ஹார்மனால் பணியமர்த்தப்பட்ட ஒரு அடையாள ஓவியர் டான் ஆண்டர்சன், கென்டக்கி ஃபிரைடு சிக்கன் என்ற பெயரை உருவாக்கினார். ஹார்மனைப் பொறுத்தவரை, லுய்ஸீ ஐ சேர்ப்பது அவரது உணவகத்தை போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுத்துவதற்கான ஒரு வழியாகும் கென்டக்கியிலிருந்து ஒரு தயாரிப்பு தெற்கு விருந்தோம்பலின் கவர்ச்சியான மற்றும் தூண்டப்பட்டபடமாக இருந்தது.

It's finger lickin' good, என்ற சொற்றொடரை ஹார்மன் முத்திரை குத்தினார், இது இறுதியில் நிறுவனத்தின் குறியீடாக மாறியது. அவர் 1957 இல் bucket meal முறையை அறிமுகப்படுத்தினார் (14 கோழித் துண்டுகள், ஐந்து ரொட்டி சுருள்கள் மற்றும் ஒரு அட்டைப் பெட்டியில் pint of gravy). அவர்களின் சிறப்புக் குறியீடாக உணவை ஒரு காகிதப் பெட்டியில் பரிமாறுவது நிறுவனத்தின் ஒரு சிறப்பான அம்சமாக மாறியது.

1963 ஆம் ஆண்டில் , 600 *KFC* உணவகங்கள் இருந்தன, இது அமெரிக்காவின் மிகப்பெரிய துரித உணவு நடவடிக்கையாக அமைந்தது. *KFC* துரித உணவுத் தொழிலில் கோழியைப் பிரபலப்படுத்தியது.

> **ஒரு குழந்தையாக அவர் கற்றுக் கொண்ட சமையல் குறிப்புகளை வைத்து அவர் முதன் முதலில் ரயில் பயணிகளுக்கு சமைத்து விற்பனை செய்யத் தொடங்குகிறார். அதன்பின், நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு சொந்த சாப்பாட்டுக்கடை ஒன்றை நடத்தலாம் என அவர் தீர்மானிக்கிறார்.**

1964 ஆம் ஆண்டில், சாண்டர்ஸ் *KFC* ஐ ஜான் ஒய். பிரவுன் ஜூனியர் மற்றும் ஜாக் சி. மாஸ்ஸி தலைமையிலான முதலீட்டாளர்கள் குழுவுக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (2021 ஆம் ஆண்டில் சுமார் 17 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு) விற்றார். இந்த ஒப்பந்தத்தில் சாண்டர்ஸுக்கு வாழ்நாள் சம்பளம் மற்றும் அவர் நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டாளர் மற்றும் வர்த்தக மூலமாக பொறுப்பானவராக இருப்பார் என்ற ஒப்பந்தமும் எழுதப்பட்டது .

இந்தச் சூழல் தொடர்ச்சி 1970 இற்குள் 48 வெவ்வேறு நாடுகளில் 3,000 விற்பனை நிலையங்களை உருவாக்கியது . 1971 ஜூலையில், பிரவுன் இந்த நிறுவனத்தை கனெக்டி கட்டை தளமாகக் கொண்ட ஹியூப்ளின் என்ற உணவு மற்றும் பானங்கள் நிறுவனத்திற்கு 285 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (2021 இல் சுமார் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ) விற்றார்.

அவரது விளம்பரப் பணிகள் அவரை அமெரிக்க கலாச்சார வரலாற்றில் ஒரு முக்கிய நபராக ஆக்கியது. அவர் இறக்கும் போது, உலகளவில் 48 வெவ்வேறு நாடுகளில் 6,000 லுய்ஸீ விற்பனை நிலையங்கள் இருந்தன, ஆண்டுக்கு 2 பில்லியன் டொலர் மதிப்புள்ள விற்பனை இருந்தது. கடந்த 1980 இல் தனது 90 ஆவது வயதில் சாண்டர்ஸ் மரணமடைந்தார். 65 வயதில் தன் வாழ்க்கையை ஆரம்பித்த சாண்டர்ஸ் சாதிக்க வயது தடையில்லை என்பதற்கு சிறந்த உதாரணம் என்றால் அது மிகையல்ல. *

# கடல் வழியாக ஆஸி செல்ல முயன்ற முப்பது தமிழர்கள் சிலாபத்தில் கைது

## அவர்களில் 17 பேர் யாழ்ப்பாண இளைஞர்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.14

கடல் வழியாக வெளிநாடு செல்ல முயற்சித்த வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 30 தமிழர்கள் சிலாபம் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் வைத்து நேற்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 17 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தையும் ஏனையோர் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களையும் சேர்ந்தவர்களாவர். இவர்கள் கப்பல் வழியாக ஆஸ்திரேலியா நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதென கடற்படையினர் தரப்பில் கூறப்பட்டது.

இந்த நபர்கள் மேலதிக விசாரணைக்காக தற்போது சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# தமிழரின் தூபிகளை நொறுக்கி மானங்கெட்ட அரசியல் பிழைப்பு

## அரசை சாடுகின்றார் மனோ எம்.பி.



தெற்கில் கிளர்ச்சிகளின்போது கொல்லப்பட்ட சிங்கள மக்களின் நினைவாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள தூபிகளைப் போன்று, போரில் மாண்ட தமிழ் மக்களின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, இலங்கை இராணுவ சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது நொறுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டவட்டமான மானங்கெட்ட செய்கையை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன், மாண்டவர்களை நிந்திக்கும் இந்த அநாகரிக செயலை கண்டிக்கும்படி சிங்கள முற்போக்கு சக்திகளையும், பௌத்த சமூக தலைவர்களையும் நாம் அழைக்கின்றோம்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள மனோ கணேசன், இது பற்றி மேலும் கூறியுள்ளதாவது:-

கொரோனா நோய் ஒழிப்பில் தோல்வி, துறைமுக நகர் சீனாவுக்கு தாரைவார்ப்பு ஆகிய நாட்டின் உண்மையான தேசிய பிரச்சினைகளை சிங்கள மக்களின் கவனத்துக்கு வராமல் தடுக்க, அவ்வப் போது தமிழ், முஸ்லிம் மக்களின் மீது இனவாதம் காட்டி தேசிய கவனத்தை வேறு பக்கம் கொண்டு போகும் அரசின் நீண்ட நாள் தந்திர அரசியல் ஒரு மானங்கெட்ட அரசியல் பிழைப்பு என்பதை, அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

இந்தத் திட்டவட்டமான மானங்கெட்ட செய்கையை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன், மாண்டவர்களை நிந்திக்கும் இந்த அநாகரிக செயலை கண்டிக்கும்படி சிங்கள முற்போக்கு சக்திகளையும், பௌத்த சமூக தலைவர்களையும் நாம் அழைக்கின்றோம்.

தெற்கில் 1971, 1989 கிளர்ச்சிகளின் போது கொல்லப்பட்ட சிங்கள மக்களின் நினைவாக தூபிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, போரில் மாண்ட தமிழ் மக்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நிர்மாணிக்கப்பட்டது. இது இன்று இலங்கை இராணுவ சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நொறுக்கப்படுகின்றது.

ஆகவே, மாண்டவர்களை நிந்திக்கும் இத்தகைய அநாகரிக செயல்களைக் கண்டிக்காமல், சிங்கள முற்போக்கு சக்திகளும், பௌத்த சமூக தலைவர்களும் தொடர்ந்தும் மௌனமாக இருக்க முடியாது. அதேபோல் மாண்டு போன தமிழ் மக்களை நேரடியாகக் குறி வைத்து அவமானப்படுத்தும் இந்த நடவடிக்கையை, தமிழ், முஸ்லிம் உறவை விரும்பும் அனைத்து தமிழ் பேசும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும், கட்சிகளும் கண்டிக்க வேண்டும் –என்றுள்ளது.

# இந்தியாவிலிருந்து வந்த 55 கிலோ கேரளக் கஞ்சா

## கட்டுமரத்துடன் சிக்கியது; சந்தேகநபர் தப்பியோட்டம்

(ந.லோகதயாளன்)



யாழ். மாதகல் ஊடாகக் கட்டுமரத்தில் கடத்தி வரப்பட்ட 55 கிலோ கேரளக் கஞ்சா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டு நடுக்கடலில் வைத்து கைமாற்றப்பட்டதாகக் கருதப்படும் கேரளக் கஞ்சா, கட்டுமரத்தில் கடத்தி வரப்பட்ட வேளை இராணுவத்தினர் வருவதைக் கண்ட ஓட்டி கட்டுமரத்தையும் கைவிட்டு தப்பியோடியுள்ளார்.

இதன்போது கஞ்சாவைக் கைப்பற்றிய படையினர் அதனை இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொரோனாப் பரவல் காரணமாக கைப்பற்றிய கஞ்சா தீயிட்டு எரிக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

# ஊடகவியலாளருக்கு இராணுவம் இடையூறு



நாட்டில் தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரங்கள் அனைத்தும் முழுமையாக முடங்கியுள்ளன.

இந்நிலையில், மாங்குளம் பகுதியில் வீதித்தடையில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற செயற்பாடுகளை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க ஊடகவியலாளருக்கு அவர்கள் தடை விதித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாங்குளம் நகரப் பகுதியில் கடைகள் பூட்டப்பட்டிருக்கின்ற நிலைமைகளைப் புகைப்படம், வீடியோ எடுக்கவும் மாங்குளம் நகர் பகுதியில் நின்ற இராணுவத்தினர் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி வடக்கு, கிழக்கில் அதிகளவான இராணுவச் சோதனைச் சாவடிகளும் இராணுவக் கெடுபிடிகளும் காணப்படுகின்றன என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இராணுவத்தினர் இவ்வாறான செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# மேலும் 24 பேர் சாவு; கொரோனா காவு 892

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 24 மரணங்கள் நேற்றுப் பதிவாகியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15 ஆண்களும், 9 பெண்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பதிவான 24 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 892 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த மக்களுக்கு நானாட்டான் பிரதேச சபை அமர்வில் அஞ்சலி



இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தகாலப்பகுதியில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த மக்களை நினைவு கூர்ந்து கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நானாட்டான் பிரதேச சபையின் 39 ஆவது அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் சபையின் 39ஆவது அமர்வு நடத்தப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு சுடர் ஏற்றி 2 நிமிடம் மௌனஅஞ்சலிசெலுத்தும்நிகழ்வு, நானாட்டான பிரதேச சபையின் உறுப்பினர் ஆர்.ஜீவனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# நோர்வூட் பிரதேசத்தில் மேலும் 30 தொற்றாளர்

நோர்வூட் பொலிஸ் பிரிவு, பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு உட்பட்ட டிக்கோயா, புளியாவத்த ஹோன்சி மற்றும் பிலிங்பொனி பகுதியில் மேலும் 30 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவ பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை வெளியான பி.சி.ஆர். அறிக்கையின் ஊடாக இந்த 30 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த 09 ஆம் திகதி குறித்த தோட்டப் பகுதியில் 200 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர்களில் 30 பேருக்கு இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு உட்பட்ட பகுதியில் மாத்திரம் இதுவரையில் 281 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் யானை தாக்கு

வவுனியாவில் யானையின் தாக்குதல் காரணமாக பயன் தரும் மரங்கள் மற்றும் விளைபொருள்கள் சேதமடைந்துள்ளன எனக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியா ஆச்சிபுரம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கற்குளம் கிராமத்துக்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியிலிருந்து கிராமத்துக்குள் நுழையும் காட்டு யானை மக்களின் பயன்தரு மரங்களையும், விளைபொருள்களையும் அழித்து சேதப்படுத்தி வருகின்றது.

இரவு நேரங்களில் கற்குளம்02, கற்குளம்03 மற்றும் கற்குளம்04 ஆகிய கிராமங்களுக்குள் செல்லும் குறித்த யானை தொடர்ச்சியாக சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது என மக்கள் தெரிவித்தனர்.

கற்குளம் கிராமத்துக்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் யானை இல்லை, கிராமத்தில் சேதத்தை ஏற்படுத்தும் குறித்த யானையானது, வேறு இடத்திலிருந்து கொண்டு வந்து எமது கிராமத்தின் காட்டுப்பகுதியில் விடப்பட்டுள்ளது என கிராம மக்கள் குறிப்பிட்டனர்.

அண்மைக்காலமாக குறித்த யானையின் அட்டகாசம் கற்குளம் கிராமத்தில் அதிகரித்துள்ளதால் கிராம மக்கள் தங்கள் தூக்கத்தையும் இழந்து அச்ச நிலையில் பரிதவித்து வருகின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு யானைப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வைப்பெற்றுத் தருமாறு கற்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டு. கிரான் குளத்தில் 6 வீதிகள் முடக்கப்பட்டன

## அரச அதிபர் தெரிவிப்பு



மட்டக்களப்பு – கிரான்குளப் பிரதேசத்தில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள 6 வீதிகள் முடக்கப்பட்டுள்ளன என அந்த மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கிரான்குளம் கிராம சேவகர் பிரிவு சி பிரிவிலுள்ள வேலாப்பொடி வீதி, கண்ணனி அம்மன் ஆலய வீதி, நெசவு நிலைய வீதி மற்றும் கிரான்குளம் கிராமசேவகர் பிரிவு பி பிரிவிலுள்ள விதானையார் வீதி, லோக்றோட் வீதி, அப்புகாமி வீதி ஆகியன இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கணவதிப்பிள்ளை கருணாகரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் அத்தியாவசிய தேவைகள் அன்றி வீட்டை விட்டு வெளியே செல்கின்றமையைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுக்கு அனுமதி

பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு குறிப்பிட்டளவு மாதாந்த கொடுப்பனவு ஒன்றை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவால் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவிற்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன எனக் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு பிரஜைகளின் விசா செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டு பிரஜைகளின் விசா செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் இதுதொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, அனைத்து வகையான விசாக்களுக்குமான செல்லுபடிக் காலம் மேலும் 60 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பு கடந்த 11 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜூலை 09 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தோனேஷிய நிலநடுக்கத்தால் இலங்கைக்குப் பாதிப்பு இல்லை

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் உணரப்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுனாமி எச்சரிக்கை மையத்தால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து இதனை உறுதிப்படுத்தியுள்ளன எனக் குறித்த மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நினைவுத் தூபி உடைப்புக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை

## இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்ட சம்பவத்துக்கும் இராணுவத்துக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

நினைவுத் தூபியை உடைக்க வேண்டிய தேவை இராணுவத்துக்குக் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்வதற்காக வைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி அடையாளம் தெரியாதவர்களால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, குறித்த நினைவுத் தூபி உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

# சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடும் உறவுகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கிவைப்பு



வவுனியாவில் சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



சுவிஸ் நாட்டில் வசித்து வரும் கோபிநாத் தம்பதிகள், தமது உறவினரான காவியாவின் பிறந்தநாளை முன்னிட்டு, 64 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

# ஆடைத் தொழிற்சாலைகளுக்கு எவ்வித தடையும் விதிக்கவில்லை

பயணக் கட்டுப்பாடு காரணமாக ஆடைத் தொழிற்சாலைகளின் செயற்பாடுகளுக்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை என இராணுவத் தளபதிஜெனரல்சவேந்திரசில்வாதெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்றுக் கட்டுப்பாட்டுக்காக பயணத்தடைகள் விதிக்கப்பட்டிருந்தாலும், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய ஆடைத் தொழிற்சாலை செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனஅவர் தெரிவித்தார். ஆடை உற்பத்தி, விநியோகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி போன்ற நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு உயிர்குமிழி முறையை பின்பற்றி செயற்பட முடியும் என அவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 3 கர்ப்பிணிகள் கொரோனாவுக்கு சிகிச்சை

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 3 கர்ப்பிணிப் பெண்கள், சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வைத்திய அத்தியட்சகர் தெரிவித்துள்ளவை வருமாறு –

சாவகச்சேரி வைத்தியசாலையில் 2 கர்ப்பிணிப் பெண்கள் ஏற்கனவே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணொருவர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும் கர்ப்பிணிப் பெண்கள் என்பதால் அதிகூடிய கவனம் செலுத்தி சிகிச்சை அளித்து வருகின்றோம். அத்துடன் அவர்களுக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படுமாயின் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பு சித்தார்த்தன் எம்.பியும் கண்டனம்



இந்த அரசின் செயற்பாடுகள் எதிர்பார்த்ததுதான். எனினும், இவ்வளவு தூரம் இன ஒடுக்குமுறையை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயம். உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியை இடிப்பதன் மூலம், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனஒடுக்குமுறையின் பரிமாணத்தை உலகிற்கு அவர்களாக வெளிப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளிலொன்றான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்பு தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வது மாத்திரமல்ல, உயிரிழந்தவர்களின் நினைவாக தூபியை வைத்திருக்கவும் அனுமதிக்க மாட்டோம் என இந்த அரசாங்கம் தெளிவாக நிரூபித்துள்ளது.

இந்த அரசின் செயற்பாடுகள் எதிர்பார்த்ததுதான். எனினும், இவ்வளவு தூரம் இன ஒடுக்குமுறையை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயம்.

உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியை இடிப்பதன் மூலம், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இன ஒடுக்குமுறையின் பரிமாணத்தை உலகிற்கு அவர்களாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்களிடமிருந்து தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாதென்பதையும் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளனர். இந்த மோசமான நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம்.

உயிரிழந்த உறவுகளை அஞ்சலிக்கும் தமிழ் மக்களின் உரிமையை எவரும் தடுக்க முடியாது என தெரிவித்துள்ளார்

## விபத்தில் படுகாயமடைந்த தாயும் மகனும் பரிதாப சாவு

யாழ்ப்பாணம், மானிப்பாய் உரும்பிராய் வீதியில் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த தாயும் மகனும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் உயிரிழந்துள்ளனர்.

சிகிச்சை பலனளிக்காமல் இருவரும் உயிரிழந்தனர் என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இறப்பு விசாரணைக்காக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் வல்வெட்டித்துறை வேம்படியைச் சேர்ந்த மோகனதாஸ் பிறேமாவதி (வயது – 68) என்ற தாயாரும் அவரது மகனான மோகனதாஸ் திலீபன் (வயது – 32) என்பவருமே உயிரிழந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வழிபட காரில் பயணித்த போது, மானிப்பாய் – உரும்பிராய் வீதியில் கார் வேகக்கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளாகியது.

அதில் தாயும் மகனும் படுகாயமடைந்தனர். காரில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்தனர் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

## ஆழ்கடல் மீன்பிடிக்க அனுமதி இடைநிறுத்தம்

மீனவர்களுக்கு சில பகுதிகளில் ஆழ்கடல் மீன்பிடிக்கச் செல்வதற்கான அனுமதி கடந்த வியாழக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுகின்றது என கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பேருவளை, திக்கோவிட்ட, பிடிப்பன,கற்பிட்டி,மயிலிட்டி ஆகிய மீன்பிடி துறைமுகங்களில் இருந்து ஆழ்கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கான அனுமதியே கடந்த வியாழக்கிழமை முதல் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற மோசமான காலநிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த வாரத்தில் சிவப்பு பட்டியலில் சேர்க்கப்படும் அபாயத்தில் இலங்கை

கொவிட் வைரஸ் தொற்றின் மிக மோசமான கட்டத்தை எட்டிய நாடாக இலங்கை 'சிவப்பு பட்டியலில்' சேர்க்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த வாரத்துக்குள் அப்பட்டியலுக்குள் இணைக்கப்படலாம் எனவும் எச்சரித்துள்ளார்.

இதனால் நாட்டிலிருக்கும் வெளிநாட்டு வர்த்தகர்கள், புகழ்பெற்ற வர்த்தகர்கள், இரட்டைக்குடியுரிமை உடையவர்கள் என அனைவரும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஆரம்பித்துள்ளனர்.

அதனை விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 4 நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதன்படி கனியன், நோட்டன்பிரிட்ஜ், உடவலவ மற்றும் குகுலே கங்கை ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.

இதனால் குறித்த நீர்த் தேக்கங்களை அண்மித்த மற்றும் தாழ்வான நிலப் பகுதியில் வாழும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

## பல்வேறு கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்தது

களு கங்கை, நில்வள கங்கை மற்றும் ஜின் கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

எனவே குறித்த கங்கைகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## சட்டவிரோத மணல் அகழ்வு: ஜேசிபி பறிமுதல் சாரதி கைது

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்விற்குப் பயன்படுத்தப்பட்ட ஜே.சி.பி. இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊழவனூர் பகுதியில் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கனரக இயந்திரம் மூலம் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் எனத் தருமபுரம் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சுற்றிவளைப்பில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஜே.சி.பி. இயந்திரத்துடன் அதன் சாரதியும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அதே பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியிலீடுபட்ட சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடமிருந்து 420 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கைதிகளுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்கள் ரத்து

சிறைச்சாலைகளில் நீண்ட நாள்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின், நன்நடத்தைகளைக் கருத்திற்கொண்டு, அவர்கள் குடும்பத்தினருடன் சில தினங்கள் தங்கியிருப்பதற்காக வழங்கப்பட்டுவரும் வரப்பிரசாதங்கள் அனைத்தையும் தற்காலிகமாக இடைநிறுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது என சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

சிறைச்சாலைகளில் நீண்ட நாள்களாகச் சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளின் நன்நடத்தைகளைக் கருத்திற்கொண்டு , அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் சில தினங்கள் வாழ்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தால் விசேட வாய்ப்பு வழங்கப்படும்.

நீண்டகாலமாக சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள கைதிகள், தங்களது தண்டனைக் காலத்தில் இருவருடகாலத்தைப் பூர்த்தி செய்ததும், அவர்களது நற்செயல்களைக் கருத்திற்கொண்டு ஆரம்பக்கட்டமாக ஒரு வாரம் அவர்களது குடும்பத்தினருடன் தங்கியிருக்க வாய்ப்பளிக்கப்படும். பின்னர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 10 – 14 தினங்கள் வரை குடும்பத்தினருடன் தங்குவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

கைதிகளின் நன்நடத்தை தொடர்பில் தரவுகள் சேகரிக்கப்பட்டு, அது தொடர்பில் விடயப் பொறுப்பு அமைச்சரிடம் அறிவித்து, அவருடைய அனுமதியுடனே இந்த வரப்பிரசாதம் வழங்கப்படும்.

எனினும் தற்போது சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளில் சிலருக்கு இந்த வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், கொவிட் – 19 வைரஸ் பரவல் காரணமாக அதனை செயற்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் அந்த செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

## பணம், பரிசுகளை வென்றதாகக் கூறி மோசடி; பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது

பணம் மற்றும் பரிசுகளை வென்றதாகக் கூறி மோசடி செய்திகளைப் பெறும்போது பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி பயனர்களால் பல மோசடி செய்திகள் பெறப்படுகின்றமை அவதானிக்கப்படுகின்றது என ஆணையகம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்த போலி பணம் மற்றும் பரிசுகளை கோருவதற்குஎந்தவொருகொடுப்பனவைசெலுத்தவோ அல்லது தனிப்பட்ட தகவல்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

அதற்காக, இந்த மோசடி செய்திகளைப் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ள பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி திறக்கப்பட்டுள்ளது.

பரிசுத் தொகை அல்லது பரிசுகளை வென்றிருக்கிறீர்கள் என்று கவர்ந்திழுக்கும் செய்திகளை நீங்கள் பெற்றால், கையடக்க சேவை வழங்குநர்களிடமிருந்தோ அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்திடமிருந்தோ கிடைப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

அத்துடன், தயவுசெய்து பணம் செலுத்துவதைத் தவிர்த்து, எந்தவொரு தனிப்பட்ட தகவலையும் பகிர்வதைத் தவிர்க்குமாறும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணையகம் கேட்டுள்ளது.

## சுகாதார விதிமுறைகளை மீறி தேர் திருவிழா தெல்லிப்பழை ஆலயம் மீது வழக்குத் தாக்கு!

யாழ்ப்பாணம், மே 15

கொரோனாத் தொற்று அதிகரிக்கும் சூழ்நிலையில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் தேர் திருவிழாவை முன்னெடுத்தனர் என தெல்லிப்பழை பிரதேசத்தில் உள்ள பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினருக்கு எதிராக தெல்லிப்பழை பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் ஒன்றுகூடல் நிகழ்வுகளைத் தவிர்க்குமாறு அரசால் அறிவிக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த 5 ஆம் திகதி, தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பிள்ளையார் கோவில் ஒன்றில் தேர் திருவிழா முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி சுகாதாரப்பிரிவினருக்கு அறிவிக்காமல் அதிகாலையிலேயே இந்தத் திருவிழா முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதாரப்பிரிவினருக்கு முறைப்பாடு கிடைத்த போது அங்கு சென்ற சுகாதாரப்பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். ஆனால் தேர்திருவிழா நடந்ததா இல்லையா என மக்கள் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. அதனால் ஆதாரம் எதுவும் அவர்களுக்கு சிக்கவில்லை.

இந்நிலையில் குறித்த திருவிழாவின் ஒளிப்படக்காட்சிகள் இணையத்தளம் ஒன்றில் 6 ஆம் திகதி பதிவேற்றப்பட்டுள்ளன. இதனை அவதானித்த சுகாதாரப் பிரிவினர் உடனடியாக கோவில் நிர்வாகத்தினருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

அந்த வகையில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் குறித்த கோவில் நிர்வாகத்தினருக்கு எதிராக தெல்லிப்பழை பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2021 இல் வெளியிடப்பெற்றது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்பு களைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





அங்கம் 04

- செல்லத்துரை ரவீந்திரன் -

**15.நாங்கள் சாட்சியங்களை முன் வைத்தால் எமக்கு நடந்த அட்டூழி யங்கள் ‘இனப்படுகொலை’ என சர் வதே சத்தால் அங்கீகரிக்கப்படுமா?**

அப்படியான அங்கீகாரம் நேச நாடுக ளின் மூலமாக (அது ஒரு நாடாகவும் அன்றி கூட்டமாகவும் இருக்கலாம்), அது அவர்களின் அரசியல் பலத்தால், அரசி யல் காரணங்களுக்காகவும் நீதியின் அடிப்படையிலும் நடந்தது அல்லது நடக்க விருப்பது ஓர் இனப்படுகொலை என நியாயப்படுத்தப்படலாம். அதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஆராய்வோ தீர்ப்போ அடிப்படையாக வேண்டியதில்லை. அந்த நேச நாடுகளினால் தரப்படும் அர சியல் வலுவே பிரதானமானது.

உதாரணமாக இந்தியா தானாகவே நேரடியாக கிழக்கு பாகிஸ்தானில் தலை யிட்டு பங்களாதேஷை உருவாக்கியது. உருது பேசும் மக்களினால் மேற்கொள் ளப்படுகின்ற அட்டூழியங்களாலும் கொலை களாலும் கோடிக்கணக்கான அகதிகள் இந்தியாவில் அடைக்கலம் தேடுகிறார்கள் என்பது காரணமாகச் சொல்லப்பட்டா லும், உண்மையில் இந்தியா. பாகிஸ்தானி டையே இருந்த அரசியல் விரிசல்களே அடிப்படை காரணமாக இருந்தது. அந்த நாள்களில் பாகிஸ்தான் அமெரிக்காவின் கைத்தடியாக இருந்து இந்தியாவுக்குப் பல சர்வதேச தொல்லைகளை கொடுத்து கொண்டிருந்து. கிழக்குப் பாகிஸ்தானைப் பிரித்து பங்களாதேசை அமைத்தது ஒரு நீதியான காரணமாயினும் பாகிஸ்தா னைப் பலவீனப்படுத்துவதே அப்போது முக்கியமானதாக இருந்தது.

அதேபோல்தான், முனைய யூகோஸ் வாவியாவின் கூட்டு இன நாடுகள் பிரிந்து 1980இல் பல நாடுகளாகின. அவற் றைக் கூட்டாக வைத்திருந்த அதிபர் மார்ல் டிட்டோ (Marshall Tito) 1980இல் இறக்கவும் கிழக்கு ஐரோப்பில் கம்யூனிஸ்டுகள் பலம் குன்றவும் இன ஒடுக்குதலில் கீழ் யூகோஸ் லாவியாவில் கட்டுப்பட்டு இருந்த பல இன சமூகங்களுக்கு அண்டை நாடுகளில் அவரவர்களது இனத்தவர்கள் ஆதரவு தர குரோவேசியா (Crootia), பொஸ்னியா (Bosnia), கேர்சேகொவின (Herzogovina), மஸிடோனியா (Masdonia) சேபியா (Serbia) என அவை பிரிந்தன.

பின்னர் சேபியா (Serbia), கொசோவா (Kosovo) என்ற மாகாணத்தில் பகுதியில் பெரும்பான்மையாக வாழ்ந்த அல்பே னிய முஸ்லிம்கள் அல்பேனிய (Albania) நாட்டின் உந்துததால் தனிநாடாக பிரக டனம் செய்தனர். இதனை சேபியா பயங் கரமாக எதிர்த்துப் பல அட்டூழியங்களைச் செய்தது. இதனை அடுத்து மேற்கு ஐரோப் பிய இணை நாடுகள் (NATO – நேட்டோ) ஈடுபட்டு கொசோவா மாகாணத்தை ஐ.நாவின் பொறுப்பின்கீழ் கொண்டு வந் தன. ஆனால் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகள் தேவையான உதவிகளை – முக் கியமாக மக்களின் பாதுகாப்புக்கு – தர வில்லை என்ற குற்ற சாட்டுக்களால் NATO (நேட்டா) அங்கத்துவ நாடுகளே சேபியா வோடு பலத்த போரில் ஈடுபட்டு கொசோவா 2000ஆம் ஆண்டு சுதந்திர நாடாகியது.

யூகோஸ்லாவியாவில் நடந்த இந்த அட்டூழியங்களை விசாரித்து இனப் படுகொலைகளை தீர்மானிக்க, ஒரு சர்வ தேச குற்றவியல் மன்றம் நிறுவும் 827 என்ற தீர்மானம் 1993இல் நிறைவேற் றப்பட்டது.

ருவண்டாவிற்கும் யூகோஸ்லாவியா வுக்குமாக ஏற்படுத்தப்பட்ட குற்றவியல் மன்றங்கள் சர்வதேச குற்றவியல் நீதி மன்றமல்ல. ஆனால் அவை ஐ.நா. பாது காப்பு சபையின் அங்கீகாரத்துடனேயே நிறுவப்பட்டன.

**16.அப்படியான நேச நாட்டினதோ, நாடுகளினதோ உதவியும் அனுகு முறையும் இல்லாது போனால் என்ன வாகும்?**

யானை அசைந்து, அசைந்து வருவது போல, தன் காலம் எடுத்து ஓர் இனப்படு கொலை விவகாரம் ஐ.நா. தேசிய பாது காப்பு சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ (ICC) அல்லது சர்வ தேச குற்றவியல் மன்றுக்கோ (ICT) பாரப் படுத்தி தீர்ப்படைந்துதான் மேற்கொண்டு நகர வேண்டும்.

இதற்கு பாரிய காலம் – பல வருடங்கள் – ஆகலாம். பல சர்வதேச அரசியல் சுழிக ளில் சிக்கி அல்லல்படலாம். சூறாவளியில் அகப்பட்ட குருவிக்கூடு போல் கலைந்தே போகலாம். முள்ளிவாய்காலில் இருந்தே 12 வருடங்கள் ஓடிவிட்டன. அப்போதும் நமது நிலை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு பாரப்படுத்தபடவில்லை. அத்தகைய நிலை யில், இவை நடந்து அப்படியான தீர்மா னம் வர எவ்வளவு காலமாகலாம் என் பதை கணக்கு போடலாம்.



**17.ஐ.நா. பாதுகாப்பு சபையினூடா கத்தானா சர்வதேச குற்றவியல் நீதி மன்றதுக்கோ (ICC) அல்லது சர்வ தேச குற்றவியல் மன்றுக்கோ (ICT) தமிழர்களது விவகாரம் போகமுடி யும்?**

ஆம், நாங்கள் எவ்வளவு மகஜர்கள், மனுக்கள் கொடுத்தாலும் ஐ.நா. பொதுச் சபை அதை ஏற்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அன்றில் குற்றவியல் மன்றுக்கோ பாரப்படுத்தவேண்டும் என் பதே இன்று இருக்கும் நடைமுறை.

அதை எப்போதும் எமது அரசியல் தலைவர்கள் தெரிந்திருந்தார்கள்.

**18.ஐ.நா. பாதுகாப்பு சபையினால் தமிழர் விவகாரம் சர்வதேச குற்றவி யல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டா?**

தற்போது உள்ள சர்வதேச புவியியல் சூழ்நிலையிலும் ஐ.நாவின் அமைப்பு விதி களின் அடிப்படையிலும் அதற்கான சாத் தியக் கூறுகளோ சந்தர்ப்பமோ இல்லை. ஏனெனில் பாதுகாப்பு சபையின் நிரந் தரமான அங்கத்தினர்களான ஐந்து (05) நாடுகளில் சீனாவும் ரஷ்யாவும் இருக் கின்றன. இந்த நாடுகள் கூட்டாகவோ தனி யாகவோ, பாதுகாப்பு சபையில் எடுக்கப் படும் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்று வதற்கு தடுப்பதிகாரம் (Veto Power) கொண்டவை.

சீனா, ரஷ்யா இரண்டும், இலங்கை யின் நேச நாடுகளாகவுள்ளன. சீனா வெளிப்படையாகவே இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு எல்லா உதவிகளும் செய்து செயல்படுவதால் அது தனது தடுப்பதி காரத்தை பாவித்து வீழ்த்தும்.

அப்படியான தீர்மானத்தை ஆதரிக் கும் நாடுகள், சீனா ரஷ்யாவுடன் அவர் களுக்குத் தேவையான அரசியல் லாபங் களை விட்டு கொடுத்துப் பேரம் பேசி அவர்களையும் ஆதரிக்கச் செய்ய வழி கோலக் கூடும் என்று சிலர் எண்ணுகி றார்கள். வடகொரியாவை பேரம் பேசி ருவாண்டா, யூகோஸ்லாவியா நாடுக ளுக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டமையை இவர்கள் உதாரணம் காட் டுகிறார்கள்.

இவை சர்வதேச அரசியல் சூழலில் ஏற்படக்கூடியவை. ஆனால் தடுப்பதிகாரம் இருந்து அது பாவிக்கப்பட்டால் எந்த தீர் மானமும் நடைமுறைபடுத்தப்பட மாட்டாது.

**19.ஒரு நேச நாடு, தமிழ் மக்களுக்கு நடக்கும் அட்டூழியங்களின் அடிப் படையில் அவற்றைத் தடுக்க நடவடிக் கைகளில் ஈடுபடலாமா?**

ஆம், அது அந்த நாட்டின் அக்கறை, நட்புறவு, அரசியல் பலம், நீதிககாக அதை செய்யவேண்டும் என்ற சிரத்தை, அந்த நட்பு நாட்டுக்கு வரக்கூடிய அரசியல் ஆதாயங்கள், அனுகூலங்கள், நட்டங்கள் என்பவற்றில் தங்கியுள்ளது.

ஐ.நா. உருவாக்கப்பட முன்னும் பின் னும் அப்படி எவ்வளவோ நடந்துள் ளன. மிக கிட்டிய காலங்களில் இந்தியா பங்க ளாதேஷை உருவாக்கியது. கிழக்கு தீமோர் தீவு சுதந்திரமடைந்தது. யூகோஸ் கிலோவியா பல நாடுகளாகின என்பவற் றைச் சொன்னேன்.

**வளரும்......**

